# மாற்றுக் கருத்தின் மதிப்பு





3

ஹான்ஸ, சோபி ஸ்கொல் • பேர்ட்ரன்ட் ரஸல் •
ஔங்சன் சூ கீ • ரேமண்ட் வில்லியம்ஸ் •
வாங் லிசி • வெண்டல் பிலிப்ஸ் •

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வெளியீட்டுத் தொடர் பற்றி

மாறுபட்ட சருத்துக்களைச் சுதந்திரமாகப் பரிமாறிக் கொள்வதில் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்பது இவ்வெளியீட்டுத் தொடரின் ஆய்வுப் பொருளாகும். இது சீரிய அரசியலாட்சிக்கு மட்டுமல்ல, கலாச்சார, விஞ்ஞான, பொருளாதார நாகரீக வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

குறிப்பிட்டதொரு நிலைபரத்தின் தேவைக்காகக் கருக்கொண்ட இத்தொடரின் முகலாவது வெளியீடு, சர்வதேசப் பரப்பில் விநியோகிக்கப்பட்டபோது புல்வேறு சமூகத்தவரின் சிறந்த உணர்ச்சிகளை எதிரொலித்தது. சகிப்பின்மை பயங்கர வேகத்தில் பரவ, சமீபகாலமாக தீவிர வன்முறையால் இலங்கை விகாரமடைந்து கொண்டிருக்கும் வேளையில் ஐ.உ.பா.இ இந்த ஆய்வுப் பொருளுக்குப் பொருத்தமான ஆக்கங்களைத் தெரிவுசெய்து, தொகுத்து, மொழிபெயர்த்து வருகின்றது. அரசியல் ஆய்வாளர்கள், தத்துவ ஞானிகள், அவர்கள் போன்ற பிற சிந்தனைச் சிற்பிகளின் எழுத்துக்கள், சட்டத்தீர்ப்புக்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வரலாறுகள், தனிநபர் மனச்சாட்சிக்கும் நிலையூன்றிய ஆட்சியாளருக்குமிடையில் நிகழும் மோதலின் பலனாய் உணர்ச்சியூட்டப்பட்ட அனுபவங்களைச் சித்திரிக்கும் இலக்கிய நாடகப் படைப்புகள், இன்னும் சில மனிதரின் கருத்து வேறுபாடு தொடர்பான சுவையான உதாரணங்கள், நடந்து கொண்டிருக்கும் விவகாரங்களைப் பற்றிய விளக்க உரைகள் ஆகிய துறைகள் இவற்றுள் அடங்கும். சுதந்திரமாய் கருத்துப் பரிமாறுவதற்கெதிரான அச்சுறுத்தல் அரசாங்கத்தினால் மட்டும் சுமத்தப்படுவதில்லை. அத்தகைய அச்சுறுத்தல்கள் வேறு மூலங்களிலிருந்தும் தோற்றமளிக்கின்றன, தோற்றமளிக்கவும் முடியும்.

பல்வேறு சமூக, அரசியல் பிரிவுகளிடமிருந்து, கூட்டாகவோ தனியாகவோ கொண்ட மனோபாவத்திலிந்து, ஏன் பெரும்பான்மையோரின் பகிரங்கமான கருத்து வெளியீட்டிலிருந்தும், அத்தன்மையான அச்சுறுத்தல் ஏற்படலாம். உண்மையிலேயே தனக்கெதிரான கருத்து வெளியீட்டை பெரும்பாலான சமூக ஆதரவுடன்தான் அரசாங்கம் அடிக்கடி நசுக்குகின்றது; சமூகத்தின் காய்தல் உவத்தல்களை அரச செயற்பாடுகள் பலவிதமாய் பிரதிபலிக்கின்றன. எனினும் சகிப்பினமை எங்கிருந்துவரினும் சமூகத்துக்கு ஆபத்தானதால் அதை இனங்கண்டு உதிர்க்கவேண்டும். இந்தக் குறிக்கோளே இந்த வெளியீட்டுத் தொடரின் உத்துசக்தி.

ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழிகளில் இத்தொடர் வெளியாகிறது. இங்கே சேர்க்கப்பட்ட எழுத்தோவியங்கள் குறிப்பிட்டதோர் ஒழுங்கிலோ, ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவையாகவோ இப்போதைக்குத் தொகுக்கப்படவில்லை. காலப்போக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தொகுதியாக அவற்றைச் சிறந்த முறையில் வெளியீடுவதுதான் உத்தேசம். தொகுதியில் இடம்பெற்றுள்ள கருவூலங்கள் வாசகர்களிடமிருந்து ஆலோசனைகளையும், பங்களிப்புகளையும் தூண்டிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதைப்பார்க்கிலும் முழுமையான திட்ட விவரணம் மாற்றுக் கருத்தின் மதிப்பு 1 கொண்டுள்ளது பின்னட்டை உட்புறத்தைப் பார்க்கவும். இதனைப்பற்றியும் இத்தொடரின் மற்றைய புஸ்தகங்கள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு இப்புஸ்தகத்தின் கடைசி பக்கங்களைப் பார்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A - 95

Rs. 100/-

# மாற்றுக் கருத்தின் மதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக் கருத்தின் மதிப்பு

## 3

இலங்கை ஜனநாயக உரிமைகளைப்
பாதுகாப்பதற்கான இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குழு
குமாரி ஜெயவர்தன
சூரியா விக்ரமசிங்க

மேற்பார்வை ஆசிரியர் (தமிழ்)
வே. கணபதிப்பிள்ளை

பிரதான ஆய்வாளர் தொகுப்பாளர்
மார்க் தொம்ப்ஸன்

திட்ட உதவியாளர்
ரஞ்ஜித் பெரேரா

தமிழாக்கம்
சரோஜினி அருணாச்சலம்

அட்டை
இடது, சோபி ஸ்கொல்; வலது, ஔங்சன் சூ கீ

© இலங்கை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான
இயக்கம் - 1994

ISBN- 955-9277-03-0

வெளியிட்டவர்
இலங்கை ஜனநாயக உரிமைகளைப்
பாதுகாப்பதற்கான இயக்கம் சார்பில்
சூரியா விக்கிரமசிங்க
31, சார்ள்ஸ் பிளேஸ்
கொழும்பு 3

முதலாவது பதிப்பு 1994
இரண்டாவது பதிப்பு 2007
மூன்றாவது பதிப்பு 2016

அச்சிட்டவர்
கருணாரத்ன அன்ட் சன்ஸ் லிமிட்டட்
65 C,
தள்கஹாவில வீதி,
மிடெல்லமுளஹேன,
ஹொறன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


நுழைவாயில் 1

*ஹான்சும் சோபி ஸ்கொல்லும்* 6

வெள்ளை றோஜா துண்டுப்பிரசுரங்கள்

*பேர்ட்ரன்ட் ரஸல்* 17

சிந்தனைச் சுதந்திரமும் உத்தியோக பூர்வ பிரச்சாரமும்

*ஔங்சன் சூ கீ* 20

அச்சத்திலிருந்து விடுதலை

*ரேமண்ட் வில்லியம்ஸ்* 27

கலை: சுதந்திரமும் ஒரு கடமைதான்

*வாங் லிசி* 29

அரசியல் சீர்திருத்தங்கள், விஞ்ஞானம், ஜனநாயகம்

42 விஞ்ஞானிகளின் வேண்டுகோள் 38

*வெண்டல் பிலிப்ஸ்* 40

சொற்பொழிவுகளிலிருந்து எடுத்த பகுதிகள்

நன்றி நவிலல் 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

''ஒருவர் தனது கருத்தை வெளியிடுவதற்கு உள்ள உரிமை இருக்கிறதே, அது மேற்கத்திய நாடுகளுக்கு மட்டும் பொருத்தமான கோட்பாடு; ஆகவே இது உலகின் ஏனைய இடங்களுக்கு ஒவ்வாத கொள்கை'' என்று சொல்கிறார்கள். கருத்து வேற்றுமைகளை அடக்கி ஆள்வதற்கு இன்று கையாளப்பட்டு வரும் நவ நாகரீக முறைகளில் இதுவும் ஒன்று. அதைவிட மோசமான அவதூறு என்னவென்றால் கருத்து வேறுபாடு உடையவர்கள் மேற்கத்தேய ஆதிக்கங்களின் கையாட்கள் மட்டுமல்ல; நாம் வாழும் சமுதாயங்களுக்கே துரோகம் இழைப்பவர்கள் என்றும் சொல்லப்படுவது.

முக்கிய சில ஆசிய அரசாங்கங்கள்தான் இப்படி வாதாடுகின்றன, மனித உரிமைகள் தொடர்பாக அவர்களின் நடவடிக்கைகள் சருவதேச ரீதியாக மதிப்பீடு செய்யப்படுவதை இவர்கள் எதிர்க்கிறார்கள். அரசியல் அதிகாரிகள் மட்டும்தான் இப்படி வாதிடுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. குறிப்பிட்டதொரு சித்தாந்தத்தை முன் வைப்பவர்கள் சமய நம்பிக்கைகளில் ஊறிப்போனவர்கள், குறிப்பிட்ட பொருளாதாரக் கட்டுப்பாடுக் கோப்பில் நம்பிக்கை உள்ளவர்கள் ஆகியோர் கூட மற்றவர்கள் தங்கள் கருத்துக்களை ஏற்க மறுக்கும் பட்சத்தில் இத்தகைய கணைகளைத் தொடுக்கப் பின்னிற்க மாட்டார்கள், இப்படி எவ்வளவோ சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றுக்குச் சான்றுகளும் ஏராளம் உண்டு. தமது சொந்தக் கருத்துக்களை மற்றவர்கள்மேல் திணிக்க முயன்று அதில் தோல்வி கண்டவர்களுக்கு மனக்கசப்பு ஏற்படுகிறது, மனக்கசப்புத்தான் எல்லாவற்றுக்கும் மூலகாரணம். இப்படியாக மனக்கசப்புக் கொண்டோர் கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்ப்பதைக் கண்மூடித்தனமாய் எதிர்க்கிறார்கள். இத்தகைய நிலைமைகளால் கருத்து வேறுபாடுடையவர்கள் ஈவு இரக்கமின்றித் துன்புறுத்தப்படுவதுடன் பயங்கரமான வன்செயல்களுக்கும் ஆளாகிறார்கள். சுதேச கலாச்சாரப் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல் என்ற பெயரில் இந்த நயவஞ்சக நாசகாரச் செயல்கள் நியாயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பயங்கரக் கட்டுக் கதைகள் பொய் என்பதை ''*மாற்றுக் கருத்தின் மதிப்பு*'' நிரூபிக்கின்றது, கருத்து வேறுபாடுகளினால் மேற்கத்தேய நாடுகளில் பலதரப்பட்ட சமுதாய விளைவுகள் ஏற்படுகின்றன என்று சொல்வது அப்பட்டமான பொய். விஞ்ஞானத் துறையிலும்சரி, கலை, அரசியல்துறைகளிலாயினும் சரி, மேற்கத்திய நாடுகளில் கருத்து மாறுபாடு கொண்டவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தொழில்த்துறை சகபாடிகளின் விமர்சனங்களுக்கு ஆளாகியும் இருக்கிறார்கள், அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கு; தாம்கொண்ட கொள்கைகளில் விடாப் பிடியாக இருந்தவர்கள்; தமது உயிரையே அர்ப்பணிக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற் பட்டிருக்கின்றன. *''மாற்றுக் கருத்தின் மதிப்பு''* என்னும் நூலான இரண்டாவது தொகுதியில் கலிலியோ கலிலி கொண்ட கருத்து வேறுபா ட்டால் அவர் எப்படியெல்லாம் துன்புறுத்தப்பட்டார் என்று விளக் கப்பட்டுள்ளது. இவர்கள் வாழ்ந்த காலத்தில் என்னென்ன நம்பி க்கைகள் சமுதாய அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனவோ அதை யெல்லாம் ஏற்கும்படி இவர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். இப்படியாக இந்த மேதைகள் கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவங்களை எடுத்துக் கூறிப் பறைசாற்றுஞ் சின்னம் *''மாற்றுக் கருத்தின் மதிப்பு''* என்ற ஆக்கம். இளைய தலைமுறையினரான ஹன்சும் சோபி ஸ்கொல்லும் ஜேர்மனியில் நாட்சி இயக்கத்தினரை எதிர்த்ததால் தூக்கிலிடப்பட் டார்கள். அடக்கி ஒடுக்கும் நெருக்கடிகளுக்கு மத்தியில் மனிதனின் வீறு கொண்ட நெஞ்சம் எந்தளவு உயரலாம் என்பதற்குச் சமீபகாலத்து நிகழ்ச்சிகளிலிருந்து உதாரணங் காட்ட வேண்டுமானால் ஹன்ஸ், சோபி ஸ்கொல் இருவரின் வீரகாவியம்தான் சாலப் பொருந்தும்.

இந்தத் தொகுதியில் இடம் பெறும் கதைகளிலும் கட்டுரைகளி லுமிருந்து மாற்றுக் கருத்துப் பற்றி இன்னுமொரு உண்மை வெளிப் படுகிறது. அதாவது சமூதாயச் சூழல் எதுவாக இருந்தாலும் அங்கு எல்லாம் அறிவியலின் முன்னேற்றப் பாதையில் மாபெரும் திருப் பங்கள் உண்டாவதற்குக் காரணமாயிருந்த கருத்து வேறுபாடுகள் அங்கே வெளிக்காட்டப்பட்டது தான். இந்த உண்மை பல சந்தர்ப் பங்களில் தெளிவாகியுள்ளது. மரபு வழி வந்த கோட்பாடுகள் ஆரம் பத்தில் தனிமனிதர்களின் ஆய்வுக்குரிய பொருளாயிருந்தாலும் அதன் விளைவான நன்மைகள் இன்றைய சமுதாயத்துக்கு மட்டுமல்ல முழு மனித இனத்துக்கும் என்றுமே பயன் உடையவையாக அமையும் என்பதுதான் உண்மை. வாந்தி பேதி நோய் பரவாமல் தடுப்பதற்கு டாக்டர் ஜோன் ஸ்னோ அவர்கள் ஆற்றிய அளப்பரிய தொண்டு என் *றும் மறக்க முடியாதது. ''மாற்றுக் கருத்தின் மதிப்பு''* தொகுதி1ல் இச் சாதனை பதிவாகி உள்ளது. மரபுவழிக் கோட்பாடுகள் தனிமனித ஆய்வுக்குரிய பொருளாக இருப்பதால் நல்ல விளைவுகளே ஏற்படும் என்பதை அச்சாதனை ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. விஞ்ஞான உண்மைகள் சில மறுக்கப்படுவதனால் ஏற்படும் அருமை பெருமை களைப் பற்றிய ஒரு கட்டுரையை இனிவரும் தொகுதியில் வெளியிட எண்ணியுள்ளோம். இந்தத் தொகுதிக்குச் சிறப்பாகத் தன்பங்களிப்பை வழங்க முன்வந்துள்ள ஒரு நூலாசிரியர் - நுண்நச்சு ஆய்வுத்துறையில் நிபுணர்- மரபுவழிப் பண்பியலிலிருந்து உதாரணங்களைக் காட்டி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவின் வளம்மிக்க பண்பாடுகளையும் வரலாறுகளையும் ஆராயும்பொழுது சில உண்மைகள் புலப்படுகின்றன. அதாவது மனிதனுக்கே பழக்கமாகிவிட்ட ஆராயும் திறனும் எதிர்த்து வாதிடும் தன்மையும் இவற்றால் கட்டவிழ்ந்து பரிணமிக்கும் மாற்றங்களும் இந்தப் போக்குக்கு வித்திட்ட மானிடர்களின் தன்னலம் கருதாத மாட்சியும் அந்த வரலாற்றில் புதைந்து கிடப்பதை நாம் காண்கிறோம். எதை நம்பவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் தனிமனிதனுக்கு இருக்க வேண்டிய பொறுப்பின் முக்கியத்துவத்தை 2500 ஆண்டுகளுக்கு முன்னரே பகவான் புத்தர் வலியுறுத்தினார். எங்களுடைய முதலாவது தொகுதியில் பகவான் புத்தரின் இந்தப் போதனையைத் தெட்டத் தெளிவாக எடுத்துரைத் துள்ளோம். அண்மைக் காலத்தில், 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐக்கிய நாடுகள் சபை வியன்னாவில் மனித உரிமைகள் பற்றி ஒரு உலக மகாநாடு நடத்தியது. இந்த சந்தர்ப்பத்தில் தீபத் நாட்டைச் சேர்ந்த xiv ஆம் தலைலாமா அவர்கள் மனித உரிமைகளை உபயோகிப்பது, முக்கியமாக கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்துவதற்குரிய உரிமையை உபயோகிப்பது, ஆசிய நாடுகளுக்குப் பொருந்தாத ஒரு கோட்பாடு என்ற எண்ணத்தை எதிர்த்து வெளிப்படையாக விமர்சிக்க முன்வந்தார்.

''மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கோட்பாடுகள் மேற்கத்திய நாடுகளின் எண்ணக்கருவில் உருவாகியவை, அவை ஆசியாவுக்கோ மூன்றாவது உலகின் ஏனையபகுதிகளுக்கோ பொருந்தாதவை; ஏனென்றால் இந்த நாடுகளின் கலாச்சாரப் பாரம்பரியங்கள் வேறுபட்டவை; சமுதாய அமைப்பிலும் வேறுபாடுகள் உண்டு என்று சமீபகாலத்தில் சில ஆசிய நாடுகள் வாதிடத் தொடங்கியுள்ளன. நான் இந்தக் கருத்தை ஏற்பதாக இல்லை. அது மட்டுமல்ல; ஆசியமக்களின் பெரும் பகுதியினரும் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. ஏனென்றால், சுதந்திரம், சமத்துவம், கௌரவம் என்பவற்றில் பற்றுக் கொள்வது எல்லா மனிதர்களினதும் பிறப்பியல்பு, மாறுபாடுகள், மரபுகள் என்பவற்றைக் காரணம் காட்டி மனித உரிமைகளை மறுக்கவோ மீறவோ இயலாது. வேறு இனத்தில் பிறந்த மனிதர்களுக்கு, பெண்கள், சமுதாயத்தில் பின்தங்கியோர் என்பவர்களுக் கெதிராக பாரபட்சம் காட்டும் மரபு சில மதங்களில் உண்டு, எனினும் சருவதேச அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுடன் இவை முரண்படுமானால் இந்த வாழ்க்கை நெறிகளை மாற்றியே ஆக வேண்டும். எல்லா மனிதர்களும் சமம் என்பது உலகளாவி ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குத்தான் நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்''.

கருத்து வேற்றுமை பற்றி நிலவும் உயர்ந்த மரபுகளிலிருந்து வழுவாமல் இருந்தது அவருடைய பேச்சு. அவர் வெளியிட்ட கருத்தின் கடைசி வார்த்தைகளில் இரண்டு அடிப்படைக் கொள்கைகள் உள்ளடங்கி நிற்கின்றன. முதலாவதாக சமுதாயப் பழக்கவழக்கங்கள் காலம் கடந் தவையென்றும் நியாயமற்றவையென்றும் காணப்பட்டால் அன்றைய சமுதாயத்துக்கு அவை எந்தளவில் பொருந்தும் என்பதை உடனடியாகப் புனராய்வு செய்வது அச்சமுதாயத்தின் தலையாய கடமையாகும். அதைவிடுத்து அவற்றை விமர்சிப்பவர்களின் வாய்க்குத் தாழ்பாள் போடுவது தர்மமல்ல. இரண்டாவதாக எல்லா மனிதர்களும் சமத்து வமானவர்கள்(அவர்களின் அறிவுணர்ச்சிகள் உட்பட) என்று ஏற்றுக் கொள்வதனால், ஒரு தனிமனிதரோ, ஒரு குழுவோ உண்மையைத் தங்கள் ஏகபோக உரிமையாக்கி விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருப்பதும் நியாயமற்றது .

மனித உரிமைகள் பற்றிய கோட்பாடுகள் மேற்கத்திய நாடுகளுக்குரியது; அது ஆசிய நாடுகளின் கலாச்சாரத்துக்கு நேர்மாறா னது என்னும் கருத்துக்குப் பலத்த கண்டனம் தெரிவித்தவர் மாபெரும் தேசாபிமானியான ஔங்சன் சூ சீ என்றால் மிகையாகாது. இந்தத் தொகுப்பில் வேறொரு இடத்தில் அவர் தோற்றமளிக்கிறார். ''ஜன நாயகத்தை தேடி''. என்னும் கட்டுரையில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

''மனித உரிமைகள் கோட்பாடு ஜனநாயக இயக்கத்தை அங்க சம்பூரணப்படுத்தும் அம்சமாக உருவெடுக்கத் தொடங்கியதும் அரசாங்கத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் அதைக் கேலி செய்ய வேண்டும், கண்டிக்க வேண்டும்; அது மேற்கத்திய நாடுகளின் கலைச் சின்னம், மரபுவழிவந்த கோட்பாடுகளுக்கு இவை அன்னியமானவை என்று மார் தட்டி ஆரவாரிக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். மரபு வழிவந்த பர்மியக் கலாச்சாரத்தின் அடித்தள மாயமைந்த பௌத்தம் மனிதனைப் போற்றும் ஒரு சமயம். எல்லா உயிரினங்களிலும் மனிதன் ஒருவனே உன்னத ''புத்தநிலையை'' அடையக்கூடிய பரிபக்குவம் கொண்டவன். மெய்ப் பொருளைத் தன் சொந்த மனவுறுதியாலும் முயற்சி யாலும் உணர்ந்து அதை மற்றவர்களும் உணர்வதற்கு உதவக் கூடிய ஆற்றல் ஒவ்வொரு மனிதனிலும் உறைந்து கிடக்கி ன்றது. ஆகவேதான் மனித வாழ்க்கை அளப்பரிய பெருமை வாய்ந்தது''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கங்கள் இப்படியாக வாதிடுவதற்கு உண்மையான காரணம் என்ன என்பதை தப்புத்தவறின்றி விளக்க முற்படுகின்றார். அவர் கூறுவதாவது:

'' கொடுங்கோல் ஆட்சியில் மானிடர் மதிப்பிடதற்குரிய ஓர் அங்கமாகக் கொள்ளப்படுவதில்லை. அவர்கள் தமது நாட்டு மக்களை உருவமற்ற முண்டங்களாக, உள்ளமற்ற மரப்பொம் மைகளாக, ஆதரவற்ற ஒரு அநாதைக்கும்பலாக எண்ணுகி றார்கள். தாம் விரும்பியவிதமே இவர்களை ஆட்டிப்படைக் கலாம் என்றும் நினைக்கிறார்கள். அதாவது மனிதர்கள் ஒரு நாட்டில் தப்பித்தவறின்றி பிறவி எடுத்தவர்களாம். அவர்கள் அந்த நாட்டின் உயிர்மூச்சு என்ற உண்மையும் மறுக்கப்படு கிறது. மனிதர் தமது நாட்டுக்குக் காட்டும் உயிர்த்துடிப்புள்ள அன்பும் ஆதரவுமே தேசாபிமானமாகப் பரிணமிக்கின்றது. ஆனால் தமது சொந்த நலன்களுக்கும் நாட்டங்களுக்கும் முதலிடங் கொடுத்து அதையே நாட்டின் நலன் என்று திரித்து வரைவிலக்கணம் கூறும் அதிகார வெறி பிடித்த ஆட்சியாளர்கள் தாங்கள் செய்யும் அநீதிகளைமூடி மறைப்பதற்காக தேசாபி மானம் என்ற உன்னத உணர்வை மனப்பிராந்தி என்று தாழ் வாக மதிப்பிடுகிறார்கள். மேற்கு நாடுகளின் அரசியல் கொள்கைகள் அங்கே அமோக ஆதிக்கம் செலுத்திய கிறிஸ்தவ மறைகளின் பாரம்பரிய சித்தாந்தங்களுக்கு இணங்கவே உருவாகியுள்ளன. அந்த அரசியல் கொள்கைகளை அங்கே எவரும் எதிர்க்க முடியாது. கேட்டுக் கேள்வியில்லாமல் ஏற்றுக் கொள்ளவேண்டியது தான். ஆனால் பௌத்தம் அப்படியா? இல்லை, அது விரிந்து பரந்தநோக்கில் திளைத்த சித்தாந்தம். கொள்கைகளும் நம்பிக்கைகளும் அவை உற்பத்தியாகிய நாடுகளின் எல்லைக்குள்ளும் கலாச்சார வட்டத்துக்குள்ளும் மட்டும்தான் செல்லுபடியாகும்; அதற்கு அப்பால் அவற்றின் செல்வாக்கு எடுபடாது என்று நாம் வாதாடுவோமேயானால் பௌத்தம்வட இந்தியாவோடு அடைபட்டிருந்திருக்கும். கிறி ஸ்தவ சமயத்தின் ஆதிக்கம் மத்திய கிழக்கில் ஒரு நிலப் பரப்போடு முடிந்திருக்கும். இஸ்லாம் அராபியாவோடு முடங்கிக்கிடந்திருக்கும்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஹான்ஸ் ஸ்கொல்லும் (1918 - 1943)*
*சோபி ஸ்கொல்லும் (1921 - 1943)*

## வெள்ளைறோஜா
## துண்டுப் பிரசுரங்கள்

எல்லாம் வல்ல தீயசக்திகளைத் துணிவுடன் எதிர்த்த சம்பவங்கள் எத்தனையோ நிகழ்ந்துள்ளன. ''வெள்ளை றோஜா'' என்று பெயரிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் இந்தச் சம்பவங்களை உணர்ச்சியூட்டிச் சித்தரிக்கும் வகையில் நயம்பட வெளியிடப்பட்ட ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ள முடியும். நாட்சி ஜேர்மனியில் சர்வாதிகாரக் கொடுங்கோல் ஆட்சிக்கு ஒரு சவால் விடும் வகையில் நெஞ்சுரங்கொண்ட ஆண்களும் பெண்களுமாக ஒன்று சேர்ந்து இந்தப் பணியை மேற்கொண்டனர். இதற்குப் பின்னணியாக அமைந்த சம்பவம் ஜேர்மனியில் நாட்சிகளின் ஆதிக்கம் ஓங்கியது தான். இதைப் பற்றிய ஒரு பொழிப்புரையை இந்தக் கட்டுரையின் முடிவில் காணலாம்.

''வெள்ளை றோஜா'' என்பது ஆட்சியை இராணுவ மயமாக்குவதை எதிர்த்த ஒரு சிறியகூட்டத்தினர். ஜேர்மனியில் இளைய தலைமுறையினரில் சிலர், இதில் அங்கம் வகித்தார்கள். 1942 ஆம் 1943 ஆம் ஆண்டுகளில் இவர்கள் மிகவும் மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் குழுவின் அங்கத்தவர்களுள் நாவன்மை மிக்கவராகத் திகழ்ந்தவர் சோபி ஸ்கொல். இவரது சகோதரர் ஹான்ஸ் தனது நண்பர்களை ஒன்று சேர்த்து இந்த வெள்ளை றோஜா இயக்கத்தை ஆரம்பித்தார். அந்தச் சமயம் அதாவது 1939 ஆம் ஆண்டில், இரண்டாவது உலகமகா யுத்தம் தொடங்கியிருந்தது. அப்பொழுது சோபிக்கு பதினெட்டே வயதுதான். ''ஒருவர் ஏதாவது செய் தாக வேண் டும்; அல்லது அவர் ஒரு குற்றவாளி'' என்கிறார் சோபி.

ஜேர்மன் நகரங்கள் எங்கிலும் ஆறு ''வெள்ளை றோஜா'' துண்டுப்பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன. மியூனிக் பல்கலைக்கழக மாணவரிடையே ஆறாவது பிரசுரம் வினியோகிக்கப்பட்டிருக்கும்போது ஹான்ஸ், சோபி ஆகிய இருவரும் பிடிபட்டனர். அவர்கள் தாம் செய்ததை மறுக்கவில்லை. தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர்.

முதலாவது பிரசுரத்தின் தொடக்கம்:

''எதிர்ப்பு'' எதற்கும் இடம் கொடுக்காமல் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு ஆளான பொறுப்புணர்ச்சியற்ற ஒரு கும்பலின் கைகளில் தன்னை ஆளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹான்ஸ் ஸ்கொல், பிறப்பு 22.9.1919,
சிறை 18.2.1943, மரணதண்டனை
22.2.1943



சோபி ஸ்கொல், பிறப்பு 9.5.1921,
சிறை 18.2.1943, மரணதண்டனை
22.2.1943



வில்லி கிறாப், பிறப்பு 2.1.1918,
சிறை 18.2.1943, மரணதண்டனை
12.10.1943



குர்த் கியூபர், பிறப்பு 24.10.1893,
சிறை 27.2.1943, மரணதண்டனை
13.7.1943



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை பண்பாடடைந்த ஒருதேசம் ஒப்படைக்கின்றதென்றால் அதைவிட மானம் கெட்ட காரியம் வேறு எதுவுமே இருக்கமுடியாது. இன்று நேர்மையுள்ள ஒவ்வொரு ஜேர்மனியக் குடிமகனும் தனது அரசாங்கத்தை யொட்டி வெட்கப்படுகிறான் என்பது நிச்சயம். என்றோ ஒரு நாள் எங்கள் முகத்திரைகள் விலகப் போகின்றன, கண்கள் திறக்கும். பயங்கரக் குற்றங்கள் மனிதனின் எந்த முயற்சியாலும் தடுக்க முடியாது - குற்றங்கள் வெளிச்சத்தி ற்கு வரத்தான் போகின்றன. அந்த நாளில் நாமும் நம் வழித் தோன்றல்களும் நாணித் தலைகுனியப்போகின்றோம். இதைப்பற்றி யாராவது நினைத்துப் பார்த்தீர்களா? இதன் ஆழநீளங்களைப் பற்றி சிந்தித்தீர்களா? ஜேர்மனி நாட்டவர்கள் கேள்விக்கிடமாக வரலாற்று வழிவந்த சட்ட ஒழுங்கை முட்டாள்த் தனமாக நம்பி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டு ஆத்மீக வாழ்வு என்றால் என்ன என்று தெரியாத வகையில் நசுக்கப்பட்டு கெட்டழிந்து போயிருந்தால் ஏனைய தெய்வங்களுக்கோ உயிர் இனங்களுக்கோ வாய்க்காத உன்னத குணம் மனிதனை உயர்ந்த நிலையில் வைத்திருக்கும் மகத்தான குணம் எதுவென்றால் அவனுள்ளே குடியிருக்கும் சுயதுணிவு தான். இதை மனிதன் பணயம் வைத்திருந்தால் வரலாற்றின் போக்கை மாற்றி அதன் மூலம் அறிவுப் பூர்வமாக தாமே சிந்தித்து தீர் மானத்திற்கு வரும் துணிவை அவர்கள் கைவிட்டிருந்தால் மனிதனுக்குரிய தனிப் பண்புகளை பயன்படுத்தும் உரிமை மறுக்கப்பட்டிருந்தால் அச்சமும் அறியாமையும் நிறைந்த மானிடர்களாக அவர்கள் வாழ்க்கைப் பாதையில் நெடுந்தூரம் பயணம் செய்திருந்தால் - ஆம் அவர்களின் வீழ்ச்சியை அவர்களே நிர்ண யித்துக் கொண்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர் தொடங்கிவைக்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தால் ஊழ்வினை நம்மை துரத்தி வந்து உறுத்தத் தொடங்கி விடும். பிறகு நடப்பதென்ன? மிஞ்சியிருக்கும் கடைசி பலிக்கடாவும் பேராசைப் பேய் க்கு இரையாகி விடும். ஆகவே சாத்வீக வழியில் உங்கள் எதிர்ப்பைத் தெரிவியுங்கள். எதிர்ப்பு நாத்திக போருக்கு எதிரான அறவழி எதிர்ப்பு என்னும் இந்தச் சித்தாந்தத்தை நீங்கள் எங்கெல்லாம் இருக்கிறீர்களோ அங்கெல்லாம் பரப்புங்கள். காலம் தாழ்த்தாதீர்கள். கொலோன்போல எஞ்சி நிற்கும் கடைசி நகரங்களும் கற்குவியலாக மாறு முன்னர், தேசத்தின் கடைசி இளைஞன் எங்கோ ஒரு போர்க்களத்தில் மனிதப்பண்புகளே இல்லாத ஆனால் பெயரளவில் மனிதனாக இருக்கும் ஒருவரின் வரட்டுக் கௌரவத்திற்காகத் தன் இரத்தத்தை சிந்துமுன்னர் இந்த அறவழிப் போராட்டத்தை ஆரம்பியுங்கள். ஒவ்வொரு மனித இனத்திற்கும் அது சகித்துக்கொள்ள விரும்பும் வகையில்த்தான் ஆட்சி அமைகிறது. இதை மறந்து விடாதீர்கள்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஜேர்மனியில் மாபெரும் கவிஞர் பிரெட்ரிக் ஷில்லர் அவர்களின் ஆக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோளுடன் இந்தத் துண்டுப் பிரசுரம் முடிவடைகிறது:*

''அரசு தான் எல்லாம் என்று சொல்வது மடமை. மானுடத்தின் நோக்கங்களை அடைவதற்கு வசதி செய்யும் ஒரு ஊடகம் அரசு; அவ்வளவுதான். அதன் முக்கியத்துவம் மானுடத்தின்குறிக்கோளை அடைவதுதான். அக்குறிக்கோள் மனிதனின் ஆற்றல்கள் அனைத்தையும் வளர்வுறச் செய்வதும் மனித வாழ்வில் முன்னேற்றத்தையும் செய்முறையையும் உறுதிப்படுத்துவதேயன்றி வேறொன்றுமல்ல. எந்த ஒரு அரசு மனிதனில் குடி கொண்டிருக்கும் ஆற்றல்களை வளர விடாமல் தடுக்குமேயானால், மனித உணர்வுகளின் புனித முன்னேற்றத்தில் தலையிடுமானால் அந்த அரசு எவ்வளவு தான் உன்னதமான முறையில் உருவாக்கப்பட்டிருந்தாலும், என்னதான் அதன் வழி முறைகளில் அது முழு நிறைவானதாகத் தென்பட்டாலும் வீழ்ச்சிக்கு இலக்காகிவிடும். அப்படியாயின் புகழ்ச்சி என்ற கதைக்கு இங்கு இடமே இல்லை; இது ஒரு அழியாத பழி; இது நிலைக்கும் நாள் வரை தீமைகளும் பெருகிக் கொண்டே போகும்''

*பிரெட்ரிக் ஷில்லர் ( 1759 - 1805 )*

*வைக்கஸ், சோலன் என்போரின் சட்ட ஆக்கங்கள்*

*நாட்சிசத்தை எதிர்த்து எப்படிச் செயல்படலாம் என்ற கடினமான கேள்விக்கு மூன்றாவது துண்டுப் பிரசுரம் பதிலளிக்கிறது:*

நேர்மையான, பயனுள்ள ஓர் அரசை, தனி மனிதனின் சுதந்திரத்தையும் சகலரினதும் நன்மையையும் கட்டிக்காக்கும் ஓர் அரசை விரும்புவது ஒவ்வொரு மனிதனினதும் உரிமை. ஆனால் இன்று எங்கள் அரசோ பொல்லாங்கே உருவெடுத்த சர்வாதிராமாக விளங்குகிறது. இந்தப் பிரசுரங்களை வாசிப்பவர்கள் (ஏன் பெரும்பான்மையோர்) அரசை எப்படி எதிர்த்தால் பயனடையலாம் என்பதைப்பற்றி சரிவரப் புரிந்து கொள்கிறார்கள் இல்லை. இதற்கான மார்க்கங்களும் அவர்களுக்குத் தென்படுவதாக இல்லை. இப்பொழுது நடை முறையிலுள்ள அரசியலமைப்பைக் கவிழ்க்க வேண்டும். அந்தப் பணியில் ஒவ்வொருவரும் பங்கு பற்ற வேண்டும். இதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தவே நாம் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். வாழ்வை வெறுத்து ஒதுங்கும் துறவிகளைப் போல தனிமையை நாடி ஓடுதல் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு களம் அமைக்கவும் முடியாது, இயலுமான விரைவில் சீக்கிரமாக ஒரு புரட்சியைத் தூண்டிவிடுவதும் சாத்தியமில்லை. இல்லவே இல்லை ! சுறு சுறுப்பும் திட நம்பிக்கையுமுள்ள மனிதர்கள், தங்கள் குறிக்கோளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகாண என்னென்ன வழிகள் உண்டோ அந்த வழிகளை ஏகமனதாக ஏற்றுக் கொண்ட மனிதர்கள், ஒன்று சேர வேண்டும். அவர்களின் ஒத்துழைப்பினால் மட்டுமே இது சாத்தியமாகும். ஒன்றை விட்டால் மற்றது என்று தேர்ந்தெடுப்பதற்கு நம் கைவசம் ஏராளமான வழிகள் உண்டு என்று சொல்லிவிட முடியாது. ஒரே ஒரு வழி! அது தான் அறவழிப்போராட்டம். நாட்சிஸகொள்கையை எல்லா முனைகளிலும் எதிர்க்க வேண்டும். ஆதிக்க அரக்கனான அரசை முறியடிப்போம்.

பாசிஸ்ட் ஜேர்மனி இந்த யுத்தத்தில் வெற்றி வாகை சூடினால் ஒன்றா, இரண்டா-எத்தனை எத்தனையோ பயங்கரவிளைவுகள் தோன்றலாம்.

*நான்காவது துண்டுப்பிரசுரம் இதோ இப்படி முடிகிறது:*

''நீங்கள் செய்தது தவறு என்று சுட்டிக்காட்டும் மனச்சாட்சி தான் நாம். ''வெள்ளைறோஜா'' உங்களை நிம்மதியாக இருக்கவிடப்போவதில்லை''.

*ஐந்தாவது துண்டுப் பிரசுரம் நாட்சிகளின் தோல்வியையும், சுதந்திர மயமான எதிர்காலத்தையும் முன்னோக்கி வீறு நடைபோடுகிறது:*

''பேச்சுச் சுதந்திரம், மதச் சுதந்திரம், கொடூர பயங்கர வாதத்தின் அரசுப் பிடியிலிருந்து குடிமக்கள் ஒவ்வொருவரையும் விடுவித்துக் காப்பாற்றுதல் - இவை தான் புதிய ஐரோப்பாவைக் கட்டி எழுப்புவதற்கு நாம் அமைத் திருக்கும் அடித்தளங்கள். எதிர்ப்பை அதிகரியுங்கள். துண்டுப் பிரசுரங்க ளைப் பரப்புங்கள்''.

*தனது சகோதரியும் சகோதரனும் கொலை செய்யப்பட்டு முப்பது வருடங்களின் பின்னர் இன்ஞ்ஜகர் ஸ்கொல் இப்படிச் சிந்திக்கிறார்:*
''தத்தமது கருத்துக்களை முற்று முழுதாகப் பிரதிபலிக்கத்தவறும் இயக்க ங்களுக்கு தமது கருத்துரிமையை ஒப்படைக்க முன்வராத ஒரு மக்கள் கூட்டத்தின் குரல்களே அவர்களின் குரல்கள். ஜேர்மன் எதிர்ப்பியக்கத்தின் ஒரு சிறப்பியல்பு என்னவென்றால் அது தனது சொந்த அரசாங்கத்தை தனது சொந்த மக்களை, அந்த மக்களின் நன்மைகளை எதிர்க்கிறது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்து விட்டது. இது பலருக்குத் தீராத தலை வலியாகி விட்டது. இதிலிருந்து மீளமுடியாமல் அவர்கள் பரிதவித்துப் போனார்கள். ஆனால் எனது சகோதரனுக்கும் சகோதரிக்கும் அப்படி ஒரு நிலை ஏற்படவில்லை. அவர்கள் உள்ளத்தில் தடுமாற்றநிலை ஏதுமில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், இது ஒரு ஒருதலைப் பட்சமான காரியம். உலகளாவிய பொது மனிதர்களைப் பாதுகாப்பதென்றால் குறித்த ஒரு நாட்டின் தனிப்பட்ட நலனைப் புறக்கணித்தே செயல்பட நேரிடும். நம்மிலும் வேறுபட்ட ஒரு மக்கள் கூட்டத்துக்கெதிராக, தனி மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருக்கெதிராக கருத்து வேறுபாடு கொண்ட சிறுபான்மையினருக்கு எதிராக, தொடுக்கப்படும் யுத்தத்தில் கதியிழந்து தத்தளிக்கும் இத்தகையோருக்கு தோள்கொடுத்து உதவுவதுதான் எதிர்ப்பாளர்களின் அறநெறியாக வெளிப்படவேண்டும் ''.



பள்ளிப் பராயத்து நட்பு , கிறிஸ்ரோப் பிரோப்ஸ், பிறப்பு 6.11.1919,சிறை19.2.1943 மரணதண்டனை 22.2.1943,
அலக்ஸ்சாண்டர் ஸ்மொறல் , பிறப்பு 16.9.1917, சிறை 24.2.1943, மரணதண்டனை 13.7.1943



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்சி ஜேர்மனியின் எழுச்சி
### ''வெள்ளை றோஜா'' துண்டுப்பிரசுரத்தின் பின்னணி பற்றிய குறிப்பு

உலகமகாயுத்தத்தின் (1914-1918) முடிவில் ஜேர்மனியப் பேரரசு தோற்கடிக்கப்பட்ட பின்னர் வைமார் குடியரசு நிறுவப்பட்டது. இதன் முதலாவது தேசியப் பேரவை பெப்ரவரி 6ஆம் திகதி (1918) கூட்டப்பட்டது. அந்தப் புதிய குடியரசு பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. 1918 செப்டம்பர் மாதத்தில் ஜேர்மனிய தளபதிகள் உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரினார்கள். மேற்கு முனையில் போரிடும் படைகள் வேரோடு அழிவதைத் தடுப்பதற்காகவே இவர்கள் இப்படி வேண்டினார்கள். இதைக் கண்டித்தவர்களுள் எவரும் நாசகார விளைவுகளை ஏற்படுத்திய யுத்தத்துக்குப் பொறுப்பாக இருந்த தளபதிகளை குற்றஞ் சாட்டவில்லை, ஆனால் புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி பண்ணும் ஜனநாயக அரசியல் வாதிகளைத்தான் கண்டித்தார்கள். இந்த அரசியல் வாதிகள் வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டிய மானங்கெட்ட நிலைமைக்கு தள்ளப்பட்டார்கள். ''தோல்வி காணாத ஜேர்மனிய இராணுவத்தை முதுகில் குத்தி விட்டார்கள்'' என்ற நடுத் தரவர்க்கத்து தேசிய வாதிகளின் குற்றச்சாட்டுக்கு இவர்கள் ஆளாகியதற்கு இதுதான் காரணம். இதுமட்டுமா, குடியரசை உச்சிமேற்கொண்ட நிலச்சுவான்தாரர்கள் ஏகப்பட்டோர் 1918 நவம்பர் புரட்சிக்குப் பின்னரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களிடமிருந்தும் அதே கண்டனம் தான் வெளிவந்தது. மொத்தத்தில் இந்த ஜனநாயக அரசியல் வாதிகள் தான் இராணுவத்தின் தோல்விக்குக் காரணகர்த்தாக்களாகக் கருதப்பட்டார்கள்.

தோல்வி கண்ட ஜேர்மனிக்கு கொடூரமான தண்டனைகளை விதித்தது வேர்செயில்ஸ் ஒப்பந்தம்: ஜேர்மனி தனது எல்லைகளையும் மக்கள் தொகையையும் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. ரைன்லண்ட் பிரதேசத்தில் குடியேற்றங்கள் ஏற்பட்டன. இழப்பீட்டுப் பணமாக வகை தொகை மீறிய கொடுப்பனவுகள் அறவிடப்பட்டன. அந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து நாட்டில் பணவீக்கம் தலைவிரித்தாடியது. இதனால் ஜேர்மனிய நடுத்தர வகுப்பினரில் பெரும்பாலானவர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தனர். ஜேர்மன் நாட்டையும் அதன் மக்களையும் அழிப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக இவர்கள் அனுமானித்தார்கள். சிறிது காலத்தின் பின்னர் 1929 இல் ''பெரும் பொருளாதார மந்த நிலை'' ஜேர்மனியைத் தாக்கியது. அதன் விளைவாக 1930 ஆம் ஆண்டில் வேலையற்றோர் தொகை 44 இலட்சமாக இருந்தது. 1933 இல் இந்தத் தொகை 65 இலட்சத்தைத் தாண்டிவிட்டது.

வெற்றி பெற்ற அநேக தேசங்கள் மூலம் ஜனநாயக சித்தாந்தம் வெளியேயிருந்து ஜேர்மனிக்குள் திணிக்கப்பட்டது என்று சொல்லலாம். புறத்தேயிருந்து வந்த அரசியல் முறையென்பதால் ஜேர்மனிய மக்கள்சமூகம் இதை ஏற்கத் தயாராக இல்லை. மேலும் ஜனநாயக அரசியல் பண்பாடோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வோ என்று சொல்லும் படியாக அதற்கு முன்னர் ஜேர்மனியில் நிலவியதற்கு வரலாறே கிடையாது. புரிந்துணர்வும், மக்கள் பழைய கோட் பாடுகளின் பிரகாரம் எல்லோரும் கைசரை (மன்னர்) பயபக்தியுடன் வணங்க வேண்டும். நெறி திறம்பாத நாட்டுப் பற்றும், தேசாபிமானமும் ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டும். எல்லாம் வல்ல அரசாங்கத்தின் எதிரில் தனி மனிதனும் அவனது விருப்பு வெறுப்புகளும் முக்கியமானவையல்ல. எதையுமே கேட்டுக் கேள்வியின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். உண்மையாக உழைத்த ஒரு சில ஜனநாயக வாதிகள் வைமார் குடியரசில் இருந்தார்கள். இவர்களுக்கு அனுபவம் குறைவு. அத்துடன் அவர்களுக்கிடையே பிரிவினையும் தலை தூக்கியது. பழமை பாடிச் செழுமை தேடுவோரும், நாட்சிச வாதிகளும் பொதுவுடமை வாதிகளும் அவர்களை எதிர்த்தனர். அவ்வளவு தான்; வைமர் குடியரசு சீர்குலைந்து மறைந்தது.

1921 ஆம் ஆண்டு முதல் தேசிய சோஷலிஸ்ட் (நாட்சிச) தொழிலாளர் கட்சியின் தலைவராக இருந்த ஹிட்லரின் உயர்ச்சிக்கு இந்தச் சீரழிவு தான் களம் அமைத்துக் கொடுத்தது. அக்காலத்தின் போக்குக்கு உகந்ததாக இவர் ஒரு திட்டத்தை முன்வைத்தார். தொழில் வாய்ப்புக் கொடுப்பதுடன் பழிக்குப் பழி வாங்குவதாகவும் உறுதியளித்தார். தேசத்தின் பழம்பெருமைகளை மீட்டுத் தருவ தாகவும் முதலாவது உலக மகாயுத்தத்தின் தோல்விக்குக் காரணமாயிருந்தவர்கள் என்று யாரையெல்லாம் குற்றஞ்சாட்டினாரோ அவர்களின் கணக்கை முடித்து விடுவதாகவும் சூளுரைத்தார். அவருக்கு நிறைய ஆதரவாளர்கள் இருந்தா ர்கள். 1933 ஆம் ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதி ஹின்டன்பார்க் தனது சொந்தப் பகுத்தறிவின் உறுதியைக் கைவிட்டு, வற்புறுத்தலின் பேரில் ஹிட்லருக்கு முதலமைச்சர் (சான்சலர்) பதவியை வழங்கினார். அந்தக்கணமே சர்வாதிகார ஆட்சி ஆரம்பமானது. படிப்படியாக ஹிட்லர் தனது கையாட்களை முக்கிய பதவிகளில் அமர்த்தத் தொடங்கினார். தனது அரசியல் எதிரிகளில் பலரை ஏதேதோ உத்திகளைக் கையாண்டு கொல்லவும் பின்னிற்கவில்லை ஹிட்லர்.

1933 ஜனவரி 30 ஆம் திகதி ஹிட்லர் பிரதமமந்திரி (சான்சலர்) ஆனார். 1933 பெப்ரவரியில் ஒரு நாள் இரவு ஜேர்மனிய பாராளுமன்றம்- ஜேர்மன் ஆட்சிமன்றம் - தீப்பிடித்துக் கொண்டது. ஹிட்லர், கோயரிங்,கோயெபலஸ் ஆகியோரின் சதித்திட்டம் தான் இந்த பெருந் தீக்குக் காரணம் என்பது யாவரும் இப்போது ஏற்றுக் கொண்ட உண்மையாயினும், பத்திரிகை நிறுவன ங்கள் உடனடியாகப் பொதுவுடமை வாதிகள் மீது பழியைப் போட்டன. குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதாவது- தனியார் சுதந்திரம், கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும், யாரை வேண்டுமானாலும் கைது செய்யவும் புதிய பல குற்றங்களுக்காக மரணதண்டனை விதிக்கவும் அந்த ஆணை நாட்சிகளுக்குச் சட்டப்படி அதிகாரம் வழங்கியது.

1933 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதிக்குப் பின்னர் ஜேர்மனியில் பாரா ளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை அழிந்தொழிந்தது. இது பலாத்காரத்தை பிரயோகித்ததால் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி அல்ல. முற்று முழுவதாக சட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடவடிக்கைகள் மூலமே இது நடந்தேறியது. ''அதிகாரம் அளிக்கும்'' சட்டம் என்று அழைக்கப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் கைவிட்டது. சட்டத்தை ஆக்கும் அதிகாரம், வரவுசெலவுத் திட்ட ஒழுங்கமைப்பு, வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் முதலியவை சம்பந்தமாகப் பாராளுமன்றத்துக்கிருந்த அதிகாரங்களை ஐந்துபந்திகள் கொண்ட இச்சட்டம் நீக்கிவிட்டது. குறிப்பாகச் சொல்லப் போனால் பிரதமரே (சான்சலர்), அதாவது ஹிட்லரே, சட்ட ஆக்கத் துக்கான எல்லா வரைவுகளையும் தயாரித்தார். அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து ''மாறுபடுவதற்கும்'' அவரது சட்டங்களில் அதிகார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன: சீர்கெட்ட இந்தச் சட்டம் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்படட்டது. வேறொரு விதத்தில் சொல்வதானால் பாராளுமன்றம் தனது அதிகாரங்கள் யாவற்றையும் ஹிட்லருக்கு தாரை வார்த்துக் கொடுத்து, தன்னைத் தானே சாகடித்தது. இப்பொழுது நாட்டை நாட்சிகளின் காலடிக்குள் கொண்டு வர ஹிட்லருக்கு ''சட்டபூர்வ'' அதிகாரம் அளிக்கப்பட்டுவிட்டது. இந்தக் காரியத்துக்காக ஜேர்மனிய மக்கள் தம்மைத் தாமே நொந்துகொள்வதேயன்றி வேறு யாரையும் குறைகூற இடமிருக்க வில்லை.

ஜேர்மனிய பாராளுமன்றக் கட்டிடம் தீப்பிடித்த சம்பவத்தைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட ஆணையோடு அதிகாரம் அளிப்புச்சட்டமும் சேர்ந்து சர்வாதிகார ஆட்சிக்கு வித்திட்டது. இந்த அடித்தளத்தில் ஹிட்லர் தனது ஆட்சியைக் கட்டி எழுப்பினார். அரசியலமைப்புச் சட்டம் தகாத வழியில் பிரயோகம் செய்யப்பட்டது. நாசகாரச் சக்திகளும் பயங்கரவாதமும் தலை விரித்தாடின. அரசியல்எதிரிகளும் யூதர்களும் கொடுமைப்படுத்தப் பட்டார்கள்; அடிவாங்கினார்கள்; சிறையிலடைக்கப்பட்டு அடுக்கடுக்காக கொல்லப் பட்டார்கள். 1934 ஆம் ஆண்டளவில் ''எதிர்ப்பாளர் ஒதுக்கு முகாம்'' ஒன்று முதல் தடவையாக நிறுவப்பட்டது. ஹிட்லரின் மெய்க்காப்பாளர்கள் SS (பாதுகாப்பணி) இதன் நிருவாகத்தைக் கையேற்றார்கள். இந்தச் சிறந்த பாதுகாப்பணிக்கு ஹெயின்ரிச் ஹிம்லர் என்பவர் தலைமை தாங்கினார். இந்த நிறுவனத்தை அரசுக்குள் ஒரு அரசாக திகழவைத்தவர் இவர் தான். பெரும்பழிக்கு இலக்காகிய கெஸ்டாபோ அல்லது இரகசிய பொலிஸ் என்னும் பிரிவும் இதில் அங்கம் வகித்தது. கடைசியாகப் பார்த்தால் நாடு கடத்துவது படுகொலை செய்வது போன்ற காரியங்கள் சகலதையும் முன்நின்று நடத்திய நிறுவனத்தின் மையம் இந்தப் பிரிவுதான்.

1934ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் திகதி ஜனாதிபதி ஹின்டன்பேர்க் காலமானார். இது நிகழ்ந்த மூன்று மணிநேரத்தின் பின்னர் ஹிட்லர் நாட்டின் தலைவராகவும் இராணுவப்படைகளின் முதல்வராகவும் பதவியேற்றுள்ளார் என்னுஞ் செய்தி அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி என்ற பதவிப் பெயர் நீக்கப்பட்டது. அதன் பிறகு ஹிட்லர் Führer என்றும் Reichskanzler என்றும் அழைக்கப்படலாயினர். இராணுவத்தை தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூறம் பேக் 1935 ஆம் ஆண்டு கட்சியின் வாலிபர் அணி ஒன்றில் ஹிட்லர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதன் அவசியத்தை உணர்ந்த ஹிட்லர் அவசர அவசரமாக இராணுவ வீரர்களிடமிருந்து சத்தியப் பிரமாணம் பெற்றுக் கொண்டார். அதாவது இராணுவம் ஜேர்மனிய நாட்டுக்கோ, ஜேர்மனிய அரசியல் அமைப்புக்கோ, கட்டுப்பட்டதல்ல; ஹிட்லர் ஒருவருக்கு மட்டுமே அது கடமைப்பட்டிருக்க வேண்டும் என்பது தான் அந்த சத்திய பிரமாணம்.

ஹிட்லரின் போக்கிற்கு இருந்த கடைசி முட்டுக்கட்டை ஹின்டன் பேர்க்தான். அவரும் இறந்த பிறகு ஹிட்லரின் அதிகாரத்தை ஆட்சேபிக்க யாரும் இல்லை. அப்படித் தான் யாராவது இருந்தாலும் கூட, தனது வாக்குறுதி களினால் அவர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டார் ஹிட்லர். இத் தோடு ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி பூரணத்துவம் பெற்றது. உலகம் முன் என்றுமே கண்டிராத பேரதிகாரம் படைத்த கொடுங்கோலோச்சிய ஏகாதி பதியாக மக்களை ஆட்சி செய்தார் ஹிட்லர்.

ஆன் ரணசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பேர்ட்ரன்ட் ரஸல் ( 1872- 1970)*

## சிந்தனைச் சுதந்திரமும்
## உத்தியோகபூர்வ பிரச்சாரமும்
## (1922)

*பேர்ட்ரன்ட் ரஸல் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் வேறெவரிலும் பார்க்கப் பிரபலம் வாய்ந்த ஆங்கில தத்துவஞானி. இவருடைய சுத்த தத்துவ நூல்கள் மட்டும்தான் இவரது உலகளாவிய புகழுக்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. திருமண சம்பிரதாயங்கள் முதல் அணு வாயுத பரிகரணம் வரை, அரசியல் ஒழுக்கநெறி, சமுதாய விவகாரங்கள் என்னும்இன்னோரன்ன துறைகளில் இவர் எழுதிய ஏராளமான கட்டு ரைகளும் நூல்களும் இவருக்குப் புகழைத் தேடித்தந்தன. இதில் இவருக்கு நிகர் இவரேதான். முதலாம் உலக மகாயுத்தத்தின் போது மனச்சாட்சி இடங் கொடுக்காததால் ஆயுதப்படைத்துறைப் பணியை எதிர்த்துச் சிறை சென்றதிலிருந்து தொண்ணூறு வயதுகளில் அணுவாயுத எதிர்ப்பு ஊர்வலங்களில் பங்குபற்றியதுவரை தான் ஒரு செயல் வீரன் என்பதை அவர் நிலை நாட்டிவிட்டார்.*


*விடுதலையைப் பற்றி அவர் எத்தனையோ வேளைகளில் பேசி யிருக்கிறார். அவற்றுள் 1922 ஆம் ஆண்டின் சிந்தனைச் சுதந்திரத்தைப் பற்றிய பேருரை அடங்கும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு அடி மூச்சாக அமைந்த சிந்தனைச்சுதந்திரத்துடன் தொடர்புடைய இரண்டு கோட்பாடுகளை ரஸல் இந்தச் சொற்பொழிவில் விளக்கியுள்ளார். இவை இன்று கூட மக்களின் கவனத்தை அதிகம் ஈர்த்ததாகத் தெரியவில்லை. முதலாவதாக அவர் ''பொருளாதாரத் தண்டனைகள்'' பற்றிக் குறிப்பிடுகிறார். தங்கள் பேச்சுச் சுதந்திரத்துக்காக சட்ட உரிமைகளைப் பயன் படுத்துபவர்களுக் கெதிராக மறைமுக வலோத்காரமுறையில் இந்தப் பொருளாதார தண்டனைகளை விதிக்க முடியும். இரண்டாவதாக, ஒரு சமுதாயமானது உண்மையில்பேச்சுச் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமானால் எல்லோரும் தத்தமது ''கருத்துக்களை வெளியிடுவதற்கு சம அளவான வாய்ப்புக்களைப்'' பெற்றிருத்தல் அவசியம்.*

மேலும், ரஸல் ஆரம்பத்திலேயே கூறுகிறார், எவர் ஒருவர் அல்லது எதுவொன்று ''சுதந்திரமாக'' இருக்கிறாரோ இருக்கிறதோ அவர் அல்லது அது எந்தவித வெளிப்புற நிர்ப்பந்தத்திற்கும் கட்டுப்படத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், இந்த நிர்ப்பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன என்பதை வெளிப்படுத்தல் அவசியம். சில வெளிப்படையான கட்டுப்பாடுகள் பலவேளைகளில் இருக்கவே செய்கின்றன. அவற்றினின்று விடுபட்டால்-தான் ''சுதந்திர'' சிந்தனை உதயமாக முடியும். சிந்தனைச் ''சுதந்திரம்'' ஏற்பட வேண்டுமானால் இந்தக்கட்டுப்பாடுகளில் சில அகல வேண்டும். அப்படி அகல வேண்டியவை சில எவை என்பது தெட்டத் தெளிவாக தெரிந்தும், வேறு சில நுட்பமானவையாகவும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத புதிராகவும் தென்படுகின்றன.



*பேர்ட்ரன்ட் ரஸல், றோஜர் வ்றை வரைந்த ஓவியம், 1923*

கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாலோ அவற்றைத் தள்ளி விடுவதாலோ அல்லது சில கொள்கைகளைப் பொறுத்தவரையில் ஒரு வருக்கு அவற்றின் பேரில் உள்ள நம்பிக்கைக்கு அல்லது நம்பிக்கை யின்மைக்கு சார்பாகப் பேசுவதாலோ அவர் சட்டபூர்வமாகத் தண்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகிறார் என்றால் அங்கே கருத்துச் சுதந்திரம் இல்லை என்பது தெளிவு. உலகத்தில் மிகச்சில நாடுகள்மட்டும்தான் இந்த அடிப்படைச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றன. இந்த நவீன உலகத்தில் சட்டபூர்வமான தண்டனைகள்தான் சிந்தனைச் சுதந்திரத்துக்கு ஆகக் குறைந்த முட்டுக் கட்டைகள். சாட்சியங்களை உருக்குலைத்துத் திரிபுபடுத்தலும் பொருளாதாரத் தண்டனையளித்தலும் இரண்டு பெரிய முட்டுக்கட்டைகளாகும். குறிப்பிட்ட சில கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்லுவதென்பது ஒருவருடைய வாழ்வூதியத் தைப் பாதிக்கிறதென்றால் இவ்விடத்தில் சிந்தனைச் சுதந்திரம் இல்லை என்பது தான் அர்த்தம். கருத்து வேற்றுமைகள் ஏற்படும் பொழுது ஒரு பக்கத்து வாதங்கள் மட்டும் மிகவும் படோடபமான முறையில் தொடர்ந்து வெளியிடப்பட்டுவர, மறு பக்கத்து விவாதங்களை முயன்று தேடிக் கண்டறிய வேண்டியதாயிருக்குமானால் அங்கேயும் கருத்துச் சுதந்திரம் பறிபோய்விட்டதென்று தான் கொள்ள வேண்டும். கருத்து மோதல்களின் போது சிந்தனையானது தன்பாட்டில் சுதந்திரமாக வெளிப்படுமானால் அங்கே சிந்தினைச் சுதந்திரம் உண்டு என்று சொல்லலாம். அதாவது எவரும் தன் எண்ணத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருப்பதோடு அந்த எண்ணங்கள் சட்டபூர்வமான அல்லது பொருளாதார வகையிலாக நன்மைகளை அல்லது தீமைகளைப் பயப்பனவாகவும் இருத்தலும் ஆகாது. இது ஒரு இலட்சியக் கோட்பாடு. இதனை முழுமையாக அடைவது என்பது பல்வேறு காரணங்களுக்காக குதிரைக் கொம்பைத் தேடுவதையொக்கும். ஆனால் வெற்றிபெறும் நிலையை விட வெற்றிக்கு இன்னும் சற்று நெருக்கமான நிலையை அணுகமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சத்திலிருந்து விடுதலை



ஔளங்சன் சூ கீ 1988-89 ஆண்டுகளில் ஆற்றிய ஆயிரத்துக்கு மேலான பொது மேடைப் பேச்சுக்களில் ஒன்று

ஔளங்சன் சூ கீக்கு 1991 ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. எனினும், அதைப் பெற்றுக் கொள்ளும் நற்பேறு அவருக்கு கிட்டவில்லை; காரணம், 1989 ஆம் ஆண்டிலிருந்து அவர் வீட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இது அந்நாட்டின் இராணுவக் கட்டளையின்படி நடந்தது. ஔளங் சன் சூ கீ, பர்மா என்று அழைக்கப்பட்டு வந்த மியன்மா நாட்டின் தேசிய ஜனநாயக கூட்டணியின் முன்னை நாள் தலைவராக இருந்தவர். 1988 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளினால் அமோக வெற்றியீட்டி பதவிக்குத் தெரிவானார். எனினும் பதவியை ஏற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைக்கவேயில்லை. காரணம், இராணுவம் தலையிட்டு தேர்தல் முடிவுகள் செல்லுபடியாகாமல் செய்து கொடுங்கோல் குழுவின் ஆட்சி முறையையும் நாட்டில் திணித்தது 1990 டிசம்பர் 10 ஆம் திகதி மியன்மாவிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்தினார்கள். எதிர்க்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கு எதிராகவே அந்த ஊர்வலங்கள் நிகழ்ந்தன . ஆர்ப்பாட்டக்காரர் சூகீயை விடுதலை செய்யும்படி கோரினார்கள். கொடுங்கோல் ஆட்சிக்குழு நாடு முழுவதிலுமிருந்த பல்கலைக் கழகங்களையும் கல்லூரிகளையும் மூடி விட்டதுதான் இதற்கு எதிர் நடவடிக்கையாகும்.

சூ கீயின் இரண்டு கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. முதலாவது கட்டுரையின் தலைப்பு ''அச்சத்திலிருந்து விடுதலை'' என்பதாகும். இதில் ஜவஹர்லால் நேரு ஒரு சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்ட கருத்தைமேற்கோள்காட்டி எழுதுகிறார். ''மகாத்மாகாந்தி அவர்கள் சாதித்த மாபெருஞ் சாதனைகளில் ஒன்று அவர் இந்திய மக்களின் நெஞ்சில் துணிவை நிலைநாட்டியது'' என்றார் நேரு.

சூ கீ தொடர்ந்து எழுதுவதாவது ஒரு மனிதனுக்கோ ஒரு நாட்டுக்கோ இருக்கக்கூடிய மிகப் பெரும் பேறு என்ன வென்றால் அபயம்; அதாவது அச்சமின்மை, உடலளவில் மட்டும் வலிமை இருந்தால் போதாது. உள்ளத்திலும் உறுதி, அச்சமின்மை வேண்டும். மனித உரிமைகள் உயிர்த்துடிப்புடன் இருப்பதை மறுக்கும் ஒரு சமுதாயக் கட்டுக் கோப்பின் அடித்தளத்தையே ஆட்டங்காணவைக்க அதற்கு சவால் விடவும் கருத்து வேறுபாட்டின் அவசியத்தை வலியுறுத்தவுமே சூ கீ அச்சமின்மையும் அச்சத்தால் உண்டாகும் விளைவுகளும் என்பவை பற்றி எழுத முனைந்தார்.

ஒருவர் கெட்டொழிந்து போவதற்கு காரணம் அதிகாரம் அல்ல. அச்சமே காரணம். அதிகாரத்தை ஏகபோகமாக்கி மக்களை அச்சுறுத்தி அரசாள்பவர்கள் எங்கே அந்த அதிகார அரக்கன் தம்மை விட்டுப் போய்விடுவானோ என்று அஞ்சிக் கெடுகிறார்கள். பர்மா தேசத்து மக்களுக்கு நன்கு பழக்கமான ''கதிகள்'' நான்கு உண்டு. அதாவது, நான்கு வகையான ஊழல்கள்/கெடுதல்கள். முதலாவது சந்த ''கதி'' இது ஆசையினால் தூண்டப்படுவது-அதாவது இலஞ்சத்தில் நாட்டம் கொள்வதால் அல்லது தன் அன்புக்குரியவர்களுக்காக நேர்மை தவறி நடப்பதால் ஏற்படுவது. அடுத்தது தோச ''கதி''-தான் வெறுப்பவர்களுக்குக் கேடு செய்வதற்காக தவறான வழிகளைக் கையாள்வதால் ஏற்படுவது. மோக ''கதி'' அறியாமையினால் ஏற்படும் மனமாறாட்டம். இந்த நான்கு கதிகளில் மகாமோசமானது பய ''கதி'' இந்தப் பய ''கதி'' - அச்சம் இருக்கிறதே, சரியானது எது தவறானது எது என்று உய்த்துணரும் ஆற்றலை நெரித்து மெல்ல மெல்ல அழித்து விடும் இயல்புடையது. அது மட்டுமல்ல. ஏனைய மூன்று வகையான ஊழல்களுக்கும் உயிர்நாடியாக இருப்பதும் இந்தப் பய ''கதி'' தான்.

பேராசையினால் மட்டுமன்றி தன் அன்புக்குரியவர்களின் நல் எண்ணத்தை இழக்கக்கூடும் என்ற அச்சத்தினால் அல்லது எதுவுமின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தினால் கூட சந்த ''கதி'' நேர்லாம். ஆகவே தன்னை மிஞ்சிவிடுவார்களோ தான் மதிப்பிழக்க நேரிடுமோ, தான் எந்த விதத்திலும் துன்புறுத்தப்படுவேனோ என்ற அச்சம் தீய எண்ணத்தைத் தூண்டிவிடும். அச்சம் என்னும் விலங்குப் பிடியைத் தகர்த்து உண்மையை நாடிச் செல்வதற்கு சுதந்திரம் அவசியம் அந்தச் சுதந்திரம் மட்டும் இல்லாவிட்டால் அறியாமையை அகற்றுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமில்லை. அச்சத்துக்கும் ஊழலுக்கும் இப்படியானதொரு நெருங்கிய சம்பந்தம் இருந்தால் எங்கெல்லாம் மக்கள் மத்தியில் அச்சம் ஆதிக்கம் செலுத்துகிறதோ அந்தச் சமுதாயங்களில் எல்லா வகையான ஊழல்களும் ஆழமாக வேரூன்றி விடுவதில் விந்தை எதுவுமில்லை.

* * *

அச்சத்துடன் பின்னிப்பிணைந்த சூழலில் அன்றாட வாழ்க்கையை ஊழலின் பிடியிலிருந்து விலக்கிக் கழிக்கத் தேவைப்படும் முயற்சி எவ்வளவினது என்பதை சட்டமும் ஒழுங்கும் நிலவும் ஆட்சியின் அரவணைப்பில் வாழும் நற்கதி பெற்ற மக்கள் உடனடியாக புரிந்து கொள்வது சுலபமான காரியமல்ல. பாரபட்சமின்றி குற்றவாளிகளுக்குத் தண்டனையை வழங்குவதன் மூலம் ஊழல்களைத் தடுப்பது மட்டும் தான் சட்டத்தின் நோக்கம் என்று சொல்லி விடமுடியாது. தீய செயல்களில் ஈடுபடாது மானிடத்தின் பெருந்தன்மையைக் கட்டிக் காப்பதற்கு சில அடிப்படைத் தேவைகள் உண்டு. இந்தத் தேவைகளை மனிதர், ஊழல்களுக்கு உட்படாமல், நிறைவு செய்யக் கூடிய வகையில் ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பவும் சட்டம் துணை புரியும். இப்படியான சட்டங்கள் இல்லாத பட்சத்தில் நீதி நெறிகளையும் உயர்ந்த வாழ்க்கைப் பண்புகளையும் பேணும் பொறுப்பு சாதாரண மனிதரின் மேல் சுமத்தப்படுகிறது. அவர்களின் இடைவிடாத, ஒன்று பட்ட முயற்சியின் தாக்கமும் தளராப்பொறுமையும் ஒரு நாட்டையே மாற்றி விடும். அது எப்படிப்பட்ட நாடு? அங்கே அச்சம் மனச்சாட்சியையும் பகுத்த றிவையும் உருக்குலைய செய்திருக்கும் பின்னணியில் மனிதனுக்குள் இயல்பாகவே இருக்கும் வேண்டத்தகாத நாசகார முனைப்புகளைக் கட்டுப்படுத்தி இணக்கமும் நீதிநெறியும் மலர வேண்டுமென்ற மனித வேட்கையை அங்குள்ள சட்ட நியதிகள் மேம்படுத்த உதவும்.

* * *

அடிப்படை மனித உரிமைகள் மறுக்கும் அரசியல் அமைப்பில் அச்சம் அரசோச்சும் என்பதை சொல்லவும் வேண்டுமா? சிறைக் கைதியாகி விடுவோமோ, சித்திரவதைக்குள்ளாவோமோ, இறந்து விடுவோமோ, நண்பர்களை, குடும்பத்தை, உடமைகளை அல்லது வாழ்வூதியத்தை இழந்து விடுவோமோ, வறுமை நம்மை பீடிக்குமோ, தன்னந்தனியாக விடப்படுவோமோ, தோல்வியை ஏற்க நேரிடுமோ, இப்படியே அச்சப்படுவதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. பலவகை அச்சங்களுக்கு மத்தியில் தன்மானத்தையும் மனிதனுக்குரிய பெருந்தன்மையையும் அவன் பாதுகாத்துக் கொள்வது தினசரி மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளும் துணிகரச் செயல்களால்தான். இந்த செயல்களை அதிகம் பொருட்படுத்தாமல் அவற்றை அசட்டை செய்து பயனற்றவை, முட்டாள்த்தனமானவை என்று கண்டிக்கத் தூண்டுவதும் ஒருவகை அச்சம்தான். பொது அறிவோ, மெய்யறிவோ ஏதோ ஒரு முகமூடியை மாட்டிக்கொண்டு உருமாறி நிற்கும் நயவஞ்சகமான அச்சம் இது வென்று தான் சொல்ல வேண்டும். வலிமை வெல்லும் என்ற சித்தாந்தத்தின் வழி வந்த கொடுங்கோலாட்சியின் கீழ்ப்பயந்து, நடுங்கி வாழும் மக்களுக்கு இந்த வலுவிழக்கச் செய்யும் நச்சுக் காற்றிலிருந்து தம்மை விடுவிப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. மக்களை நசுக்கி ஒடுக்கும் அரசியல் பேயின் கோரப்பிடியில் சிக்கினாலும் மனிதனின் துணிவும் வீரமும் செத்து மடிந்ததாக வரலாறு கிடையாது. அது மீண்டும் மீண்டும் தலையெடுத்த வண்ணமாகவே இருக்கும். ஏனென்றால், நாகரீகம் அடைந்த மனிதர்கள் இயல்பாகவே அஞ்சா நெஞ்சம் கொண்ட வர்களாவே இருப்பார்கள்.

கட்டவிழ்த்துவிடப்பட்ட அதிகார வெறியின் முன்னால் விடா முயற்சியும், துணிவும் ஊற்றெடுத்து ஓடுவதென்றால் அதற்குக் காரணம் பரம்பரை பரம்பரையாக வந்த நன்னெறிக் கொள்கைகளைப் புனிதமானவையாகப் போற்றி வணங்கும் பண்பு என்றுதான் சொல்ல வேண்டும். என்னதான் தடைகளும் தடங்கல்களும் இருந்தாலும் மானிடம் இங்கே வகிக்கும் நிலைமைக்கு அடித்தளமாக அமைவது ஆன்மீக வளர்ச்சியும் வாழ்க்கை வசதி முன்னேற்றமும் என்றால் மிகையாகாது. மனிதன் தன்னுடைய சொந்த ஆற்றலில் தனது வளர்ச்சியையும் மீட்சியையும் தேடிக் கொள்கிறான். இந்தக் குணாதிசயம் - தான் மனிதனை விலங்கினத்தி லிருந்து வேறு படுத்துகிறது. மனிதனை மனிதனாக்கும் மூலகாரணம் பொறுப்புணர்ச்சி. மனிதன் பூரணத்துவத்தை அடைவதற்கு அவனுள்ளே இருக்கும் ஆவலும், ஆர்வமும். இதைச் சாதிப்பதற்கு ஒரு வழியைத் தேடிக்கொள்ள அவனுக்கிருக்கும் அறிவாற்றல் அந்த வழியில் பயணம் செய்ய- அதாவது இந்த வழியில் அவன் கடைசிவரை பயணம் செய்யா விட்டாலும் ஒவ்வொருவருக்கும் இவ்வளவுதான் உயரலாம் என்ற ஆற்றலுக்கு ஒரு வரம்பெல்லை உண்டல்லவா - அந்த எல்லையையும் சுற்றாடலில் சம்பவிக்கக் கூடிய தடைகளையும் தாண்டி அவன் எந்த உயரத்துக்கு எழலாமோ அதுவரை செல்வதற்கு மனிதனுக்குள்ள துணிவு என்பவையெல்லாம் மனிதனின் பொறுப்புணர்ச்சிதான். இல்லாமையும், அச்சமும் ஒழிந்த சமுதாயங்களைக் கட்டி எழுப்புவதற்கு மக்களை துணிச்சலுடன் வழிநடத்தும் பகுத்தறிவும் நாகரீகமும் படைத்த மக்களுக்கு உலகக் கண்ணோட்டம்தான் பொருந்தும். உண்மை, நீதி, இரக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவை புளித்துப்போன பழைய கொள்கைகள் என்று நாம் உதறித் தள்ளி விட முடியாது ஏனென்றால் கொடுங்கோன்மையை எதிர்த்து நிற்கக் கூடிய கோட்டை கொத்தளங்கள் இவைதான்.

''ஜனநாயகத்தைத் தேடி'' என்னும் தலைப்பில் சூகீயின் இரண்டாவது கட்டுரையில் அவர் மாற்றம், ஜனநாயகம், வன்செயல், கருத்து வேற்றுமை என்பவற்றுக்கிடையே காணப்படும் பரஸ்பர தொடர்ச்சியைப் பற்றிக் கூறுகிறார்.

சில மாற்றங்கள் ஒரு நாட்டுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. எனினும் அரசியல் கொள்கைகளினால் இந்த மாற்றங்கள் நிகழ்ந்துவிடாமல் தடுக்கப்பட்டு அல்லது சமுதாயத்தின் அக்கறையின்மையால் அவை தாமதப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அத்தகைய மாற்றங்களை வேண்டிநிற்கும் உத்வேகம் தணிக்க முடியாத கட்டத்துக்குப் போய்விடுவதுண்டு. அப்பொழுது தான் புரட்சிகள் ஏற்படுவது வழக்கம். அத்தகைய மாற்றங்களை வன்செயலால் அன்றி எப்படி நிறைவேற்றலாம், அதற்கு என்னென்ன வழி வகைகள் உண்டு, என்பதை ஜனநாயக அமைப்புகளும் செயற்பாடுகளும் விளக்குகின்றன. ஆனால் கொடுங்கோல் ஆட்சியைப் பொறுத்தவரை மாற்றம் என்பது ஒரு சாபக்கேடு. விட்டுக்கொடுக்க முடியாத கொள்கையிலிருந்து திசை மாறிப்போவதை அது பொறுத்துக் கொள்ளாது. ஜன நாயகமோ இதற்கு முற்றிலும் வேறுபட்டது. அது கருத்து மாறுபாட்டு உரிமையையும், வேற்றுமைகளை சமாதான வழியில் தீர்த்து வைக்கும் பெருங்கடமையையும் வரவேற்கிறது. ஆதிக்க ஆட்சியை நடத்தும் அரசாங்கங்களில் அந்த அரசியல் வாதிகள் தங்கள் செயல்களையும், கொள்கைகளையும் எவராவது விமர்ச்சித்தால் அது சண்டைக்கான அறைகூவல் என்றுதான் கொள்வார்கள். எதிர்ப்பு என்பது அவர்களுக்கு நேருக்கு நேர்நின்று எதிர்ப்பது என்று பொருள்படும். வன்செயல், மோதல் என்று தான் இதற்கு அவர்கள் விளக்கங்கொடுக்கிறார்கள். பேச்சு வார்த்தைகள் மூலம் பாரியகருத்து வேறுபாடுகளைத் தமக்குள் வெளிப்படையாகப் பரிமாறிக் கொள்வதுதான் எதிர்ப்பு என்னும் கோட்பாடின் அடிநாதம் என்பதைக் கடிவாளக்கண்களுடன் நோக்குவோர் புரிந்து கொள்வதில்லை. பலாத்கார வற்புறுத்தலின் அடித்தளத்தில் அமைக்கப்பட்ட அதிகாரம் எந்த நேரமும் சரிந்து விடலாம். ஆகவே அவ்வித அதிகாரத்திற்குப் பாதுகாப்புக் கிடையாது. இதனால்தான் கருத்து வேறுபாடுகளை முளையிலேயே கிள்ளி விட முனைகிறது. அதிகார வேட்கை தாராள ஜனநாயக கட்டுக்கோப்புக்குள் எதிர்ப்பும், கருத்து வேறுபாடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக் கோட்பாடுகளுடனும் பழமை வாதத்துடனும் வெளியாகப் போட்டி போடக்கூடியவை. சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் எந்த அளவு மரியாதை காட்டப்படுகிறதோ அதே அளவு கௌரவம் தனி மனிதனின் உரிமைகளுக்கும் கொடுக்கப்டுவது அவசியம். இதுதான் ஜனநாயக சித்தாந்தம்.

அடக்கு முறை அட்டூழியங்களுக்கு பலியாகிய மனிதர்களே இந்த ஜனநாயக சித்தாந்தங்களை உருமாற்றி விடுவார்கள் என்று அஞ்சும்படியான ஆபத்து இருந்ததுண்டு. இதை சூ கீ அறியாமல் இல்லை. இவர் இதுபற்றிக் கூறிய வார்த்தைகள் ரோசா லக்சம்பர்க்கை நினைவூட்டுவதாக உள்ளன. அதை நாம் மாற்றுக் கருத்தின் மதிப்பு **2**ஆம் தொகுதியில் வெளியிட்டிருந்தோம். சூ கீ எழுதுறார்

அரசியல் நெருக்கடி நிலைமைகளினால் ஒரு புரட்சி இயக்கத்தின் உயிர்நாடியான இலட்சியங்கள் இருட்டடிப்புச் செய்யப்படுவதுண்டு. சில சமயங்களில் அவை செல்லுபடியாகாமல் போவதும் உண்டு. இத்தகைய இலட்சியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை. அவற்றின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது வெறும் இலட்சிய வாதம். ''விலங்குப் பண்ணை'' க்கு நேர்ந்தது போன்ற கதிக்கு எதிராக எழுப்பப்படும் ஒரு பாதுகாப்பு அரண் என்று தான் இதைச் சொல்ல வேண்டும். அதாவது புதிய ஆட்சியாளரினால் அறிமுகப்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் முதலில் நிரம்பவும் உற்சாகமளிப்பவையாக இருந்தாலும் காலப்போக்கில் இவை எந்த ஒழுங்குமுறைக்குப்பதிலாகக் கொண்டு வரப்பட்டனவோ அந்த ஒழுங்கமைப்பின் சாயல் இவற்றிலும் படிய ஆரம்பித்து விடும். பர்மா தேசத்து மக்கள் அரசாங்கம் மாறுவதை மட்டும் விரும்பவில்லை. அரசியல் கொள்கைகளின் மாற்றத்தையே அவர்கள் விரும்புகிறார்கள். எதேச்சதிகார ஆட்சியில் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கும் வெறுப்பான எச்சங்களை நீக்குவதென்றால் ஒரு அரசாங்கம் எதேச்சதிகாரத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பப்படவேண்டும் என்ற கொள்கை மாறவேண்டும். பதிலாக, அரசியல் அதிகார நம்பிக்கையின் அடித்தளத்தில் உருவாக வேண்டும். அதிகாரத்தின் மூலவிசையாக நம்பிக்கை விளங்க வேண் டும். அதாவது, ஒரு நாட்டின் மக்கள் தமது தேசத்தின் விதியைத் தாமே நிர்ணயிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாக அதற்குரிய உரிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதற்குரிய உரிமையிலும், ஆற்றலிலும் அவர்கள் கொண்ட நம்பிக்கை, நீதி நெறிகள் சுதந்திரக் கோட்பாடுகள் மனித உரிமைகள் பற்றிய தத்துவம் என்பவைபால் கொண்ட நம்பிக்கை, இவையெல்லாம் சேர்த்துதான் இங்கே நம்பிக்கை என்று கூறப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நம்பிக்கையைச் சிறிது சிறிதாக ஊட்ட வேண்டும். உணர்ச்சிகளைத் தணிக்கும் ஒரு கவர்ச்சிப் பொருளாக இந்த நம்பிக்கையின் சுவடே காணாமல் சந்தேகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்துக்கு அறிவு மூலமாகத்தான் அந்த நம்பிக்கையை ஊட்டவேண்டும். இது தான் பர்மா மக்கள் நடத்திய ஜனநாயகப் புரட்சியின் சாராம்சம். மாற்றங்கள் வேண்டும் என்று சொன்ன இந்தப்புரட்சி இருக்கிறதே, இது உலகெங்கும் போற்றப்பட்டு வந்த ஒழுக்க நெறிகளின் ஆதாரத்தில் செயற்பட்ட ஒன்று.

*சக்தி வாய்ந்த இந்த எழுத்தாக்கத்தை சூ கீ இதோ இப்படி முடிக்கிறார்:*

அதிகார வேட்கையைத் தணித்துக் கொள்வதற்காகவோ பழிவாங்கும் எண்ணத்தினாலோ இந்தப்புரட்சி தூண்டப்படவில்லை. மக்கள் சுதந்திரம், சமாதானம், நீதி, நியாயம் என்பவற்றை மனப்பூர்வமாக நேசித்தார்கள். இது தான் புரட்சிக்கு உந்துகோலாக இருந்தது. பர்மாதேசத்து மக்கள் ஒற்றுமையாக வாழவும் அர்த்தமுள்ள வாழ்க்கை நடத்தவும் உலகமக்களின் கூட்டத்தில் தாமும் சுதந்திர அங்கத்தவர்களாக சரிநிகர் சமமாக வாழவும் விரும்பினார்கள். ஜனநாயக தாகம் அவர்களை பீடித்துக்கொண்டது. அதை தணித்துக் கொள்ள அவர்கள் போராடினார்கள். தன்னுள் இயல்பாக இருக்கும் குறைபாடுகளை விஞ்சி உயர உயர போகக் கூடியது மனிதனின் ஆன்ம பலம். மனிதனிடம் என்றும் குறையாது நிறைந்திருக்கும் ஆற்றல் ஒன்று போதும் இதை நிரூபிக்க. பர்மிய மக்களின் போராட்டமும் இந்த வகையைச் சேர்ந்ததுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *ரேமண்ட் வில்லியம்ஸ் (1921-1988)*

### கலை: சுதந்திரமும் ஒரு கடமைதான்

*ரேமண்ட் வில்லியம்ஸ் பல தசாப்தங்களாக பிரித்தானியாவின் தலைசிறந்த இடதுசாரி அறிஞரெனத் திகழ்ந்தவர். இந்தக் கட்டுரையில் அவர் கலைத்துறையில் சுதந்திரம் என்னும் பொருள் பற்றி ஆராய்கிறார். இந்தக் கலைத்துறைச் சுதந்திரம் இருக்கிறதே, இதனைப் பேச்சுச் சுதந்திரத்தின் அதி வெளிப்படையான வடிவம் என்றுகூடச் சொல்லலாம். இந்தக் கலைத் துறைச்சுதந்திரக் கோட்பாடு என்பது தனி ஒரு கலைஞனின் சுதந்திரத்தைப் பற்றியது மட்டுமல்ல; இது ஒரு சமுதாய அரசியல் விளைவுங் கூட. இற்றைக்குச் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன் சோக் கிரட்டீஸ் ஒரு கோட்பாட்டைத் தோற்று வித்தார். அது அன்றிலிருந்து அடிக்கடி ஒளி வீசிய வண்ணமே இருக்கிறது. அதாவது சுயேச்சையான கருத்துப் பரிமாறல்கள் வரவேற்கத்தக்கவை; அவை கலாச்சாரப் பண்போடு சமுதாயத்தைப் பாதுகாப்பவை என்னும் சோக்கிரட்டீசின் பழைய கொள்கைக்கு ஒரு புதிய ஒளியைக் கொடுத்திருக்கிறார் வில்லியம்ஸ். ''இந்த நவீன சமுதாயங்களைப் பற்றிப் பேசும்பொழுது பல கருத்துக்கள் ஒலிக்க வேண்டும்'' என்கிறார்; ''ஏனென்றால் ஒரு சமுதாயம் முடிந்த வரை பல்வேறு அனுபவங்களைக் கூட்டிச் சேர்த்துக்கொண்டு நலம் பெறவேண்டும்''*

வில்லியம்ஸ் மேலும் எழுதுவதாவது: ஒரு கலைஞனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்று நான் சொல்லும்போது, அவனை ஒரு தனிமனிதன் என்ற முறையிலும் அவனுடைய உரிமைகளைப் பாதுகாக்கலாம்; அல்லது, அவன் ஒரு கலைஞன் என்ற முறையில் அவனுடைய உரிமைகளைப் பாதுகாக்கலாம். இந்தச் சித்தாந்தம் என்னுடைய எண்ணப் போக்கிற்கு ஒத்துப் போகவில்லையென்பது என்னவோ உண்மைதான். இருந்தும் இந்த இரண்டு வகையான பாதுகாப்புக்கள் பற்றியும் நான் மறுப்புக் கூற விரும்பவில்லை. என் எண்ணப்படி கலைச்சுதந்திரம் என்பது எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சமுதாய தேவை என்பதுதான். எங்கள் சமுதாய வாழ்க்கை முழுமை அடைவதற்கு எழுத்து இன்றியமையாத ஒரு சாதனம். ஒவ்வொருவரின் தனிக்கருத்தும் எழுத்துவடிவம் பெறவேண்டுமென்பது கருத்துப்பொதிந்த முக்கியகூற்று. ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நிகழ்ந்த வரலாறும் நிலவிய சமுதாயப்போக்கும் பாரதூரமான சிக்கல் நிறைந்ததாக இருந்திருக்கலாம். இந்தச்சூழ்நிலையில் மனிதன் அங்கே தோன்றிய பொது நிலவரங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் வாழ்ந்ததன் மூலம் பல சிக்கல்கள் உண்டாகியிருக்கலாம். இவை யெல்லாம் எமக்கு எதைப் பறை சாற்றுகின்றன? அங்கே கருத்துப் பரிமாறலுக்குப் பஞ்சமே இருக்கவில்லை என்பதையா? அல்லது பிரதிநிதித்துவம் பெற்ற குரல்கள் ஓங்கி ஒலித்தன என்பதையா? எழுதுவதற்கோ, சொல்வதற்கோ ஏதாவது முக்கிய நிகழ்ச்சிகள் இருந்தால் அவற்றை யார் வேண்டுமானாலும் முன்கூட்டியே சொல்லி விடலாம் என்பதையா? இவற்றில் எவற்றையுமே இல்லை. நீங்கள் இப்படியெல்லாம் நினைப்பதே தவறு. ஒரு பல்கூட்டுத்தொகுதிச் சமுதாயத்தில் பண்பட்ட நலன்களின் செம்மை செழிக்க வேண்டுமானால் கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற வேண்டும். இதை ஒரு நிபந்தனை என்று கூடச் சொல்லலாம். இந்த முறையில் பார்த்தோமானால் கலைஞனின் சுதந்திரத்துக்கான ஏதுக்களை உருவாக்குவது சமுதாயத்தின் கடமை. இது ஒரு தனிக் கலைஞனுக்காக மட்டும் உருவாக்கப்படுவதுமில்லை. உரிமைகள் பற்றிய வறட்டுக் கொள்கைகளுக்காக உருவாக்கப்படுவதும் இல்லை. ஆனால் ஒரு சமுதாயத்துக்கு எல்லா விதங்களிலும் தெளிவாக்கப்பட்ட அனுபவங்களும் குறிப்பிடக்கூடிய ஆக்கங்களும் தேவைப் படுகின்றது. இதுவே கலைஞன் சுதந்திரத்தின் மையப்பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாங் லிசி*

## அரசியல் சீர்திருத்தங்கள், விஞ்ஞானம், ஜனநாயகம்

வாங் லிசி உலகப் புகழ்பெற்ற வான்கோளியல் விஞ்ஞானி. இவர் பேய்ஜிங் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த காலத்திலே அதிகார அநியாயத்தை வெளிப்படையாக எதிர்த்தவர். கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்றும், பேச்சுச் சுதந்திரம் கூடுதலாக இருக்க வேண்டும் என்றும் வாதாடினவர். இவரது வாழ்க்கை கொந்தளிப்பு நிறைந்ததொன்றாகும். பல சந்தர்ப்பங்களில் இவரை சீன கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலக்கி வைத்தார்கள், சிறையில் அடைத்தார்கள், நாடு கடத்தினார்கள். பிறகு சுரங்கத்திலும் ரயில் பாதையிலும் வேலை செய்யும்படியாகியது. கடைசியில் இவருக்கு புனர்வாழ்வு கிடைத்தது. மீண்டும் நாடு கடத்தப்பட்டார். இந்த சம்பவங்களினால் லிசி தன் கொள்கையில் பின்னடைந்து விடவில்லை. தான் சரி என்று எதை நினைத்தாரோ, எதிர்கால சீன சமுதாயத்திற்கு அவசியமானது என்று எதை எண்ணினாரோ, அதை வெளிப்படையாக சொன்னார்.

சம்பவம் நடந்து பல ஆண்டுகள் கழிந்தன. இளம் வயதில் தான் அதிகாரத்தை எதிர்த்த அனுபவங்களில் ஒன்றை லிசி இப்படி வர்ணிக்கிறார்.

இளைஞர் அணி மகாநாட்டில் குழப்பம் உண்டாகியது. மூன்றாம் ஆண்டு மாணவர்களில் சிலருக்கும் எனக்கும் இந்தக் கூட்டம் அடக்கு முறை ஒழுங்குபோலத் தென்பட்டது. உப்புச்சப்பில்லாத கிளிப்பிள்ளைப்பேச்சு. நாங்கள் எல்லோரும் ''முப்பெருஞ் சிறப்புகள்'' பெற்ற மாணவர்கள். எல்லாவற்றிலும் நாம் தான் முன்னணியில் நிற்கிறோம்; இருந்தும் என்ன? திருப்தியடைந்தோமா? அது தான் இல்லை. எனவே சம்பவங்களுக்குச் சற்று உயிரூட்ட நினைத்தோம். கலந்தாலோசித்தோம்.

மறுநாள் பௌதீகப் பிரிவின் பொதுக்கிளைச் செயலாளர் மேடைக்கு வந்ததும், எனக்கு நல்ல கம்பீரமான குரல் இருந்ததால் நான், மேடையில் ஏறி ஒலிபெருக்கியை பிடுங்கி உரை நிகழ்த்த வேண்டும்; இது தான் திட்டம். இங்கே ஒரு காரியம் குறிப்பிட வேண்டும். அதாவது இந்தக் கிளைச் செயலாளர் இருக்கிறார் அல்லவா, அவரும் இந்தத் திட்டத்திற்கு உடந்தை. அதுமட்டுமல்ல; எங்கள் வகுப்புச் சகமாணவருங்கூட. அவர் தான் எனக்குப் பேசுவதற்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர். கிளைச் செயலாளர் பேசத்தொடங்கியதும் தான் தாமதம்; நான் மேடையில் தாவி ஏறினேன். ஒலிபெருக்கியை எத்திப் பறித்து என் பேச்சை ஆரம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தேன் நாம் இந்தச் சம்பவத்தை வெகு திறமையாகத் திட்டமிட்டிருந்தோம்

நான் பேசினேன் ''இந்தக் கூட்டம் உற்சாகமளிப்பதாக இல்லை. சோர்வையே தருகிறது. இளைய தலைமுறையினருக்கு எப்படிக் கல்வி புகட்டப்படுகிறது என்பதைப் பற்றி நாம் இங்கு கலந்துரையாட வேண்டும். இவர்கள் தாம் தம்பாட்டிலேயே சிந்தித்து செயற்படவேண்டும். இதற்கு உகந்த வகையில் அவர்களின் தரத்தை நாம் உயர்த்த வேண்டும். நாம் முப்பெரும் சிறப்புக்கள்[1] கொண்ட மாணவர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. எனினும், அந்த முப்பெருஞ் சிறப்புக்கள் இருந்தால் மட்டும் போதாது. ''முப்பெருஞ் சிறப்புக்கள் என்ற இந்தச் சொற்றொடரைக் கேட்டுக்கேட்டு காது புளித்துப்போய்விட்டது''. என்னுடைய பேச்சு முடிந்தது. அடுத்தகணம் எங்கும் ஒரே கூச்சலும் கூக்குரலும். வேறு எவருக்குமே பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கேட்போர் கூடம் அல்லோல கல்லோலப்பட்டது.

மறுநாள் முதல் கட்சிச் செயலாளர் தோழர் ஜியாங் லொங்ஜி உரையாற்றினார். நாள் முழுவதும் பேசினார். சிந்தனைச் சுதந்திரம் இருக்கவேண்டியது தான்; அது ஒரு நல்ல கோட்பாடு என்றார். ஆனால் எங்கள் உடனடித்தேவை என்ன ? கூட்டம் அமைதியடைய வேண்டும். .நாம் மீண்டும் படிப்பில் நாட்டம் செலுத்த வேண்டும். அவ்வளவுதான் பிறகு என்ன? இலட்சிய வாதத்தில் எங்கள் மனம் மேலும் மேலும் ஈடுபாடு கொண்டது. இப்பொழுது, அதாவது 1955, வலது சாரிகளுக்கு எதிராக பிரச்சாரம் நடந்த காலம் அன்று அந்த சிறிய கலாட்டாவை உண்டாக்கிய எங்களுக்கு வலதுசாரிகள் [2] என்ற பட்டையை தீட்டினார்கள்.

*வெளிப்படையாக எதையும் கூறிவிடும் இயல்புடையவர் வாங். இருந்தும், விஞ்ஞானத் துறையில் அவருக்குப் பெருமதிப்பு இருந்தது. வான்கோள்-இயலிலும் அண்டம் பற்றிய ஆராய்ச்சியிலும் சீனாவின் தலை சிறந்த நிபுணராக இவர் விளங்கினார். 1984 ஆம் ஆண்டு*

---

1 உடல் நலம், கல்வித்திறன், சிறந்த ஒழுக்கம்

2. வலது சாரிகளுக்கு எதிரான பிரச்சாரம் : சில அறிவாளிகள் சேர்ந்து கம்மியூனிஸ்ட் கட்சியை விமர்சிக்கத் தொடங்கினார்கள். 1957ஆம் ஆண்டில் இவர்களுக்கு எதிராக அரசாங்கம் ஒரு பிரச்சாரத்தை ஆரம்பித்தது. சுமார் 15 இலட்சம் அல்லது அதற்கும் அதிகமான மக்கள் வலது சாரிகள் என்று பட்டஞ் சூட்டப்பட்டார்கள். இவர்களில் சிலர் சிறைத்தண்டனை அனுபவித்தனர். மற்றையோர் கிராமப்புறங்களில் நீண்ட நெடுங்காலம் உடல் வருந்த உழைத்தார்கள் . வலது சாரிகள் என்று பெயர் சூட்டப்பட்டவர்களுக்கு எவரும் வேலை கொடுக்க முன்வரவில்லை. அவர்களின் தொழிலும் இப்படியாக முடிவுற்றது. ஷங்காயிலுள்ள டொங்ஜி பல்கலைக்கழகத்தில் 1986 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கேள்விபதில் அமர்வின் போது வாங்க் வெளியிட்ட விபரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய்ஜிங்கில் உள்ள விஞ்ஞான தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். வெளிநாடுகளில் நடைபெற்ற விஞ்ஞானமகாநாடுகளுக்கு இவர் வருகை தந்ததோடு அவ்வப்போது போய் விரிவுரை செய்யும் பேராசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் பணிபுரிந்தார்.

தனது பல்கலைக் கழகத்தை ஆதியோடந்தம் சீர் திருத்தி அமைப்பதற்குத் திட்டம் வகுப்பதில் வாங் முன்னணியில் நின்றார். ''சீன மக்கள் குடியரசு, முன்னர் என்றுமே கண்டிராத ஒரு துணிகரக் கல்விச் சுதந்திரக் கற்பனை என்று இந்தத் திட்டத்தை வர்ணித்தார்கள். வெளிநாட்டில் பிரசுரிக்கப்பட்ட ஒரு பேட்டியில் வாங் சீனாவின் அறிஞர் கூட்டத்துக்கு சுயமாகச் சிந்திக்கும் சுதந்திரம் குறைவு; அதுமட்டுமல்ல, தன்மானம், மதிப்பு எல்லாமே அவர்களுக்கு குறைவு தான்; எப்பொழுதும் அதிகாரத்திற்கு தலைவணங்குகிறார்கள். வாழ்வூதியத்துக்கு அரச உத்தியோகத்தர்களை நாடி நிற்கிறார்கள்'' என்கிறார். இவர் அறிஞர்களை நோக்கி ''உங்களுக்கு மேலே உயர் பதவியில் இருப்பவர்களுக்குக் கும்பிடு போடாதீர்கள். உங்கள் கூனல் விழுந்த முதுகுகளை நிமிர்த்தப் பாருங்கள்'', என்று வேண்டினார். இது மட்டுமல்ல. அவர் சீன நாட்டு மக்களுக்கும் ஒரு விண்ணப்பம் விடுத்தார். அதாவது 1980 ஆம் தசாப்தங்களில் வளர்ந்து வரும் இளைய தலை முறையைச் சேர்ந்த அறிஞர்களிடம் நம்பிக்கை வைக்கும்படி அவர்களை வேண்டினார்.

1986 ஆம் ஆண்டு செப்டம்பரில் அன்ஹிகுயி மாகாணத்தைச் சேர்ந்த ஹேவி என்னும் இடத்தில் அரசியல் அமைப்பைச் சீர்திருத்துவது பற்றி ஒரு மகாநாடு நடந்தது. இந்த மகாநாட்டில் வாங் லிசி ஆற்றிய சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன...

அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்றால் எங்கள் சிந்தனை அடியோடு மாற வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏற்படும் சிறுசிறு மாற்றங்களால் எங்கள் பிரச்சனைகள் தீர்ந்து விடாது. நாம் எதிலும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டும். முன் யோசனையோடு செயற்பட்டால் சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்த்து விடலாம். ஆனால் எமது சிந்தனையையும் சித்தாந்தத்தையும் மாற்றியாக வேண்டும். சமீப காலத்திலிருந்து தான் மேற்கத்திய நாடுகளை உண்மையில் முன்னேற்றமடைந்த நாடுகள் என்று அழைக்கக்கூடியதாக இருந்தது. எனினும் இந்த மாற்றங்களுக்கான சிந்தனைக் கருக்கள் முன்னர் எப்பொழுதோ உருக்கொண்டு விட்டன. இதன் ஆரம்ப கட்டங்களில் ஒன்று தான் மறுமலர்ச்சி இயக்கம், அன்று பெருவழக்கிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளின் கட்டுக் கோப்பை இந்த மறுமலர்ச்சி இயக்கம். முக்கியமாக சொல்வதானால், இதற்கு அடி நாதமாய் விளங்கிய நிலமானிய முறை, மன்னன் ஆட்சி, தெய்வநீதி என்னும் கொள்கை. இவற்றை யெல்லாம் தகர்த்தது மறுமலர்ச்சி இயக்கம். இத்தோடு, ஐரோப்பாவில் வரலாறு படைத்த பெரும் அறிவாளிகள் தோன்றினார்கள். கொப்பேநிக்கஸ், கலிலியோ, நியூட்டன் முதலான விஞ்ஞானிகளும் பேக்கன் போன்ற தத்துவ ஞானிகளும் அரசியல் கோட்பாடுகளைப் புனைந்த ரூசோ முதலானவர்களும் மறுமலர்ச்சி ஈன்ற அறிவுச் செம் மல்கள். இந்த மகாமேதைகளின் செல்வாக்கினால் ஐரோப்பா முன் என்றுமே கண்டிராதவகையில், சமுதாயம் பற்றி புதிய சிந்தனைகள் மலர்ந்தன. ஜனநாயகமும் சுதந்திரமும் வெற்றியீட்டி, எதிர்கால முன் னேற்றத்துக்கு உந்து சக்தியாய் விளங்கின.

அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதென்றால் வரை யறைகள் இருத்தலாகாது. வெளிப்படையாக கருத்துக் கூறும் நிலை வேண்டும். எங்கள் பிரச்சனைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்க வேண்டும். இதில் பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியாக வேண்டும். இப்படி நடப்பதற்குப் பேச்சுச் சுதந்திரம் அவசியம். பேச்சுச் சுதந்திரம் இல்லாவிட்டால் அறிவியல் சுதந்திரத்திற்கு என்ன உத்தர வாதம் கிடைக்கப்போகிறது? பேச்சுச் சுதந்திரம் இருந்தால் மட்டுந்தான் நாம் எது சரி எது நியாயம் என்று வாதிடலாம். இதன் மூலம் எங்கள் முடிவுகளையும் வெளியிட வாய்ப்பு ஏற்படுகிறது. ஜன நாயக மயப் படுத்தலில்தான் சீன சீர்திருத்தங்களின் வெற்றியே தங்கியிருக்கிறது. பேச்சுச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் கிடைத்து விட்டால் ஜனநாயகப்படுத்தல் தானாகவே சம்பவித்துவிடும். ஏனெனில், முன்னையதில் தான் பின்னையது தங்கியுள்ளது. இதற்காக நாம் புதிய சட்ட திட்டங்களை ஏற்படுத்துவது அவசியமில்லை. பேச்சுச் சுதந்திரம் பற்றி எங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இங்கே தேவைப்படுவதெல்லாம் நடைமுறையில் உள்ள சட்டங்களை நூற்றுக்கு நூறு வீதம் அனுசரித்து நடப்பதுதான். எது எப்படி யானாலும் ஜனநாயகமும் பேச்சு சுதந்திரமும் இருந்தால் தான் எங்களுக்கு விமோசனம்; நாம் எதைப்பற்றியும் கலந்துரையாடலாம்.

நல்ல கொள்கைகள் பல தீய விளைவுகளை ஏற்படுத்தும் காலம் இது. அதற்கு அடிப்படைக் காரணம் ஜனநாயகக் கொள்கைகள் நடை முறையில் இல்லாமைதான். கட்சியையும் அரசபணிகளையும் பிரிப்பது, வர்த்தக முயற்சிகளை அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பது, தொழிற்சாலை அதிபர்கள் தாமே இலாப நட்டங்களுக்குத் தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் பொறுப்பு ஏற்றல், என்னும் இன்னோரன்ன காரியங்கள் பொருத்தமான முறையில் செயற்படுவதில்லை. தலைமைப்பதவிக ளுக்கு இளைஞர்களையும் கூடிய கல்வித் தரமுடையவர்களையும் நியமிக்கும் முறைகூட தவறாகக் கையாளப்படுகிறது. அத்தகைய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்குத் திறவுகோலாக அமைவது ஜனநாயக மயமாக்கல் திட்டம் தான். மரபு வழிவந்த ஜனநாயகக் கோட்பாடு தவறானது என்று சொல்லும் வழக்கம் எங்கள் மத்தியில் உண்டு. ஆனால், இந்த வகையைச் சேர்ந்த ஜனநாயகம் தான் ''வாட்டர் கேட்'' மோசடியில் அமெரிக்க ஜனாதிபதியை பதவியிலிருந்து இறக் கியது. சீனாவில் நடைமுறையிலிருப்பது உண்மையான ஜனநாயக மாயிருந்தால் தங்கள் தலைவர்கள் ஒழுக்கநெறி தவறி நடக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றை அம்பலப்படுத்தும் துணிவும் தமது நம்பிக் கைக்குப் பாதகமாக நடந்தவர்களை நீக்கும் சக்தியும் சீனமக்களுக்குக் கூடுதலாக இருந்திருக்க வேண்டுமே. நாம் இந்த இலக்கை எட்டியி ருந்தால் அரசியல் அமைப்பை யாருமே சீர்திருத்தும் தேவை இருந்திராது . இது சுயமாகவே, சீரான வழியில் இயங்கிக் கொண்டிருந்திருக்கும். ஆனால் நாம் அந்த இலக்கை இன்னும் அடையவில்லை. ஊழல்களை அடக்குவதற்கு மக்களுக்கு வழி தெரியவில்லை. தலைமைப் பதவி வகிப்பவர்கள் இவற்றைக் கண்டு பிடித்து ஒரு முற்றுப்புள்ளி வைப் பார்கள் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகம் தான் சீர்திருத்தத்தின் உயிர். மற்றவையெல்லாம் இரண்டாம் பட்ச மானவை. நன்மை பெறவேண்டுமானால் ஜனநாயகத்தின் வழியில் செல்வது தான் சாலச் சிறந்தது...

ஒரு அரசாங்கம் அதன் குடிமக்கள் மீது சலுகைகளை பொழி வதில்லை. மக்கள் தான் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துகிறார்கள். தங்கள் சார்பில் தலைமைதாங்கி நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை அவர்கள் ஒரு சிலர்வசம் ஒப்படைத்து விடுகிறார்கள். ''ஜனநாயக விரிவுபடுத்தல்'' பற்றிப் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஆனால் இதற்குத் தவறான அர்த்தம் கொள்கிறார்கள் என்றால் ஜனநாயகம் என்பது மேலிருந்து கீழ் விரிவு படுத்தக்கூடிய ஒன்று என்ற கருத்து அதில் தொனிக்கிறது. அதிகாரம் ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும் உள்ளது என்பதுதான் ஜனநாயகத்தின் பொருள். நான் இந்த சமுதாயத்தில் ஒரு குடிமகன் என்ற வகையில் என் கடமைகளை நிறைவேற்றுகிறேன். இதற்கு ஏற்றாற்போல் எனக்கே சொந்தமான உரிமைகளும் உண்டு. அந்த உரிமைகள் தான் அரசியலில் எனக்கு இருக்கும் அதிகாரத்துக்கு அடித்தளம். என்னுடைய நாட்டில் நடக்கும் காரியங்களைக் கவனிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையும், தலைவர்கள் நாட்டுக்கு உகந்தவர்களாக தென்படாவிட்டால் அவர்களின் பதவி நீக்கத்தை வற்புறுத்தும் உரிமையும் எனக்கு உண்டு. உண்மையில் இது யாருக்கும் விளங்கக் கூடிய பொதுப்படை அறிவு. ஆனால், சீனா இந்தக் கருத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அரசாங்கம் தம்மீது கருணைமழை பொழிகிறதென்று சீனாவில் ஏராளமானவர்கள் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். தமது கடுமையான உழைப்பின் விளைபயன் என்று அவர்கள் இதை நம்பவில்லை. புத்தம் புதிய கோணத்திலிருந்து இதை நோக்கும் மனோபாவம் அவசியம்.

*1986 ஆம் ஆண்டில் ஷங்காய் நகரில் சுமார் 3000 மாணவர்களுக்கும் பல்கலைக்கழகப் பீடங்களின் அங்கத்தவர்களுக்கும் வாங் அவர்கள் ஜனநாயகம், சீர்திருத்தம், நவீனமயமாக்கல் என்னும் விடயங்கள் பற்றி சொற்பொழிவாற்றினார். இதையடுத்து கேள்வி பதில் தொடர் அமர்வு நீண்ட நேரம் நடைபெற்றது. மிகவும் உற்சாகமளிப்பதாக இருந்தது. வாங்கின் சொற்பொழிவுகளுள் மிகச் சிறந்ததென இதனைக் குறிப்பிடலாம். மின்காந்த விசைக் கதிர் வீச்சு பற்றிய (synchrotron) சர்வதேச விஞ்ஞான மகாநாட்டில் பிரதிநிதியாக உதவி மேயரை அனுப்புவதற்கு பேய்ஜிங் தீர்மானித்தது. வாங் இந்த நடவடிக்கையைப் பகிரங்கமாகக் கண்டித்தார். ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் தான் இப்படி செய்வதற்காக பேய்ஜிங் நகரத்திடம் மன்னிப்புக் கேட்க தான் மறுத்ததற்கு காரணம் காட்டி வாதிட்டார்.*

மின்காந்த விசை கதிர்வீச்சுப்பற்றி ஷாங் பைவாவுக்கு எதுவுமே தெரியாது என்று மட்டுந்தான் நான் சொன்னேன்.

மறுநாள் ஹெவீ வீட்டுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் பேய்ஜிங்கிடம் மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று அதில் சொன்னார்கள். நான் அந்தத் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்கவில்லை. தொலைபேசி அழைப்பை ஏற்றவர் எங்கள் விஞ்ஞான தொழில் நுட்பக் கல்விப் பல்கலைக்கழகத் தலைவர் தோழர் குவான் வெய்யன். ''தோழர் வாங் லிசி மன்னிப்புக் கேட்பது அவசியம் இல்லை'' என்று தோழர் அவர்களுக்கு நேரடியாகச் சொல்லிவிட்டார். கடந்த மாதம் குவான் வெய்யனும் நானும் சீனவிஞ்ஞானக் கழகத்துக்குப் போய் நாம் செய்தது சரி என்று சொன்னோம். பயணத்தில் கலந்து கொள்வதற்கு ஷாங் பைவாவுக்கு அனுமதி அளித்தது பிழை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

*1979 ஆம் ஆண்டில் டெங்க்ஸியாயோபிங் வகுத்த நாற் பெருந் தத்துவங்கள் சம்பந்தமான கேட்கப்பட்ட கேள்வி இன்னொன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இந்தத் தத்துவங்கள் - சோஷலிசம், தொழிலாளர்கள் கை ஓங்குதல், கம்யூனிஸ்ட் கட்சியின் மேலாண்மை, மார்க்ஸ்வாதம் லெனின் வாதம், மாவோஸேதுங்கின் சிந்தனைகள் ஆகியன. கேள்வியும் பதிலும் வருமாறு.*

கேள்வி: நாற்பெருந் தத்துவங்கள் இன்று வலியுறுத்தப்படுகின்றன. இது நாங்கள் உற்பத்திப் பெருக்கப் பாதையில் செல்வதற்கு தூண்டுதலளிக்குமா? அல்லது தலைமைப் பதவியிலிருப்பவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையிலமைந்த வாதவழுவா?

வாங்: இந்த நாற்பெருந் தத்துவங்கள் நம்பிக்கையின் அரசியல் வடிவங்கள். சமீபகாலத்தில், அதாவது செப்டம்பர் மாதத்தில், என்னுடைய கருத்துக்களைப் பற்றிய செய்தி ஒன்று ஒரு பத்திரிகையில் வெளிவந்தது. அதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் எந்த வகையான சூழ்நிலை நிலவ வேண்டும் என்பது பற்றி நான் வெளியிட்ட கருத்துக்கள் தான் இவை. ஒரு பல்கலைக்கழகம் என்று இருந்தால் அங்கே அறிவியல், ஜனநாயகம், ஆக்கசக்தி, சுதந்திரம் இவ்வளவும் இருக்கவேண்டும். நான் சொன்னவற்றை பத்திரிகை நிருபர் குறித்துக்கொண்டார் பிறகு எனக்கு ஒரு சீட்டு அனுப்பியிருந்தார் அதில் ''உங்கள் கருத்துக்கள் மிகவும் வரவேற்கத் தக்கவை; எனினும் இதுபற்றி நீங்கள் கூறியவை சற்று விரிவாகச் சொல்லலாமே. ஏனென்றால் நம்மக்கள் நீங்கள் கூறியவை நாற்பெருந் தத்துவங்களைப் பிரதிபலிப்பவை என்று அர்த்தம் கொள்ளலாம். தத்துவங்களின் எண்ணிக்கையும் நான்கு. நீங்களும் நான்கு அம்சங்களைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். இது கொஞ்சம் ஆபத்தானது போலத் தெரிகிறது. நீங்கள் இன்னும் ஒரு சில வசனங்களைச் சேர்த்துக் கொள்ளலாமே. இதனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதை மக்களும் புரிந்து கொள்வார்கள். மேலும் ஒரு பந்தியை சேர்க்கப் போவதாக அந்தப் பத்திரிகை நிருபருக்கு பிறகு நான் அறிவித்தேன்.

நான் வாதிட்டது என்ன வென்றால் ஒரு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானக் கண்ணோட்டம், ஜனநாயக மனப்பான்மை, ஆக்கசக்தி, சுதந்திர உணர்ச்சி ஆகியவை உயிர்த்தத்துவமாக இருக்கவேண்டும். இங்கே நான்கு தத்துவார்த்தங்கள் கூறப்பட்டன. கடைப்பிடிக்க வேண்டிய நான்கு வழிகளைப் பற்றி வீணாக உணர்ச்சி வசப்படுகின்ற மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த நான்கு வழிகளுக்கு முரணாக யாராவது பேசுகிறார்களா என்று அவர்கள் எப்பொழுதும் கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு விழிப்புடன் இருப்பார்கள். அப்படி ஏதாவது நான்கு விடயங்களை ஒரே தடவையில் யாராவது சொல்லி விட்டால் போதும் உடனே அவை கடைப்பிடிக்க வேண்டிய அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வழிகளுக்கு முரணானவையா என்று அறியத் துடிக்கிறார்கள். என் பேட்டியில் நான் அதிகமாகச் சேர்த்துக்கொண்டது என்னவென்றால் விஞ்ஞான கண்ணோட்டம் ஜனநாயக மனப்பான்மை ஆக்கசக்தி சுதந்திர உணர்ச்சி என்னும் இவை நான்கும் ''கடைப்பிடிக்கப்பட வேண்டிய நான்கு வழிகளுக்கு'' முரணாக அமையுமா? அப்படித்தான் முரண்படுகிற தென்றால் அது எதனால் ஏற்பட்டிருக்கும்? கடைப்பிடிக்க வேண்டிய நான்கு வழிகள் விஞ்ஞானத்துக்கு எதிரான மூடநம்பிக்கையையும் ஜனநாயகத்துக்கு எதிரான சர்வாதிகாரத்தையும் ஆக்க சக்திக்கெதிரான பழமைபாடும் பண்பையும் சுதந்திரத்துக்கு எதிரான பிறரில் தங்கி வாழும் நிலைமையையும் ஊக்குவிப்பதாக இருந்தால் இந்த முரண்பாடு ஏற்படத்தான் செய்யும்.'' இது தான் பேட்டியில் கூடுதலாகச் சேர்த்துக் கொண்டபந்தி. அதைப் பார்த்துவிட்டு, பத்திரிகை நிருபர் இது முன்னைய வருணனையை விட மோசமானதாகத் தெரிகிறது என்றார்.

இந்த மனப்பாங்கை வளர்க்க நாம் முழு மூச்சுடன் முயற்சி செய்ய வேண்டும். இது சம்பந்தமாக யாராவது உங்களை எதிர்க்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம் அவர்களிடம் ''கடைப்பிடிக்கப்பட ேண்டிய நான்கு வழிகள் விஞ்ஞானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் முரணானவையா?'' என்று திருப்பிக் கேளுங்கள். இப்படி அவை விஞ்ஞானம் ஜனநாயகம் முதலியவற்றோடு முரண்படுகின்றனவென்றால் '' நான்கு வழிகள்'' மூட நம்பிக்கையையும் சர்வாதிகாரத்தையும் பழமை விரும்பும் பண்பையும் பிறரில் தங்கிவாழும் வாழ்க்கையையும் ஆதரிக்கின்றன என்றுதான் அர்த்தம் என்று சொல்லிவிட்டு, அவர்கள் அதைக் கேட்டு எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று கவனியுங்கள்.

*விஞ்ஞான தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களுக்கு முதல் முதலில் உத்தியோகபூர்வமான அனுமதி கிடைத்ததாக காணப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் இது நீடிக்கவில்லை. வாங்கையும், பல்கலைக்கழகத் தலைவரையும் பதவி நீக்கஞ் செய்தார்கள். சீனாவின் உத்தியோகபூர்வமான பத்திரிகைகள் இவர்களை தாறு மாறாகத் தாக்கின. அவற்றின் நீடித்த தாக்குதலுக்கு இவர்கள் ஆளாகவேண்டியதாயிற்று.*

*எனினும் இத்தாலியில் நடந்த விஞ்ஞானக் கூட்டத்தில் பங்கு பற்ற வாங் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தாலியில் அவரை வரவேற்ற அவரது இத்தாலிய நண்பர்கள் நிரந்தரமாக அங்கேயே தங்கி விடும்படி அவரை வற்புறுத்தினார்கள். அதோடு அவருடைய ஆராய்ச்சியும் மேற்கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுப்பதாகவும் பேராசிரியர் பதவி வழங்குவதாகவும் உறுதி கூறினார்கள். இதற்கு அவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி நடந்து கொண்டார் என்பதை வாங் வர்ணிக்கிறார்:

என் மனப்பூர்வமான நன்றியறிதலை அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் அவர்களின் வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டேன். ஏனென்றால் ''பேராசிரியர் எந்த தயக்கமுமின்றி வெளி நாட்டு வேலைவாய்ப்பை உதறித் தள்ளி தாயகம் திரும்பி விட்டார்''. என்று பத்திரிகையில் தலைப்புச் செய்தி வரவேண்டுமென எதிர்பார்த்து நான் இப்படி செய்யவில்லை. எனக்கு ஒரே ஒரு அரசியல் உரிமை தான் உண்டு . அதாவது குற்றங்களை ஏற்றுக்கொள்ளும் உரிமை. இந்த உரிமையைப் பெற்றுள்ள வேறு எவருமே இப்படி விமர்சிக்கப் பட்டிருக்க முடியாது.

இல்லை! தாயகம் திரும்பிப் போகும் என் தீர்மானம் பற்றி நான் என்பாட்டில் கூறுவதை விட ஜோகான் ஷ்வைகர் அவர்களின் வார்த்தைகள் தான் ஏக பொருத்தமாக இருக்கும்:

நொண்டியாகி விட்ட ஒரு பகையாளி மௌனமாக இருக்கிறான். ஆனால், ஒரு கொடுங்கோலனை அண்டிப்பிழைக்கும் அடிமையாகவோ, அவனுக்குக் குற்றேவல் செய்யும் பணியாளாகவோ தன்னைத் தாழ்த்திக் கொள்ள மறுக்கிறான் என்றால் அவனுடைய வாழ்க்கையில் மீதி நாட்கள் இன்னல் நிறைந்ததாகவே இருக்கும்.

*அடுத்து வந்த மூன்று வருடங்களில் தொடர்ச்சியாக சில சம்பவங்கள் நிகழ்ந்தன. அதெல்லாம் ஒன்றாகச் சேர்த்து 1990 ஆம் ஆண்டில் சீனாவை விட்டு வேண்டா வெறுப்பாய் வெளியேற வழிவகுத்தது. அவர் தொடர்ந்து வான்கோளியல் விஞ்ஞானியாக வெளிநாட்டில் தன் வாழ்நாளைக் கழித்தார். ஆனால் அவர் என்ன சொன்னார் தெரியுமா?*

''சந்தர்ப்ப சூழ்நிலை இடம் கொடுத்தால் நான் உடனடியாக சீனாவுக்குத் திரும்புவேன். என்னென்ன வகையில் அந்த நாட்டின் பணிக்கு என்னால் எவ்விதத்தில் பங்காற்ற முடியுமோ அதையெல்லாம் செய்வேன். ஏன்தெரியுமா? அங்கே மட்டும் தான் நான் மனநிறைவுடன் பணியாற்ற முடியும்''.

---

இங்கே மேற்கோள் காட்டப்பட்ட பகுதிகள் சீனாவில் விஞ்ஞானம், கலாச்சாரம், ஜனநாயகம் என்னும் விடயங்கள் பற்றி வாங் லிசி எழுதிய பெருஞ்சுவர் மகாத்மியம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆசிரிய குறிப்புகள் யாவும் ஓர்வில் ஷெல்ஸ் அவர்கள் இந்த நூலுக்கு வழங்கிய முகவுரையிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42 விஞ்ஞானிகளின் வேண்டுகோள்

முன்னைய அத்தியாயத்தில் நாம் வாங் லிசி அவர்களைப்பற்றிக் குறிப் பிட்டிருந்தோம். வாங் லிசி 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சீனத் தலைவர் டெங்ஷியாயோபிங் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி கேட்டிருந்தார். இந்தச் சம்பவம் இயற்கை விஞ்ஞானிகள் 27 பேர் உட்பட சீனாவின் 42 முன்னணி கல்விமான்களை நாட்டின் தலைமைப் பீடத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஒரு பகிரங்கக் கடிதம் எழுதத் தூண்டியது. அதில் அவர்கள் பதினோராவது கட்சிக்கூட்டத்தின் மூன்றாவது நிறைபேரவையில் எடுத்த தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். ''மனதின் விடுதலை'' என்னும் சித்தாந்தமே பேரவை நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டும் கோட்பாடாக அமைந்தது. வெளிப்படையாக கருத்து உரைத்தலும் சீர்திருத்தமும் இங்கே வலியுறுத்தப்பட்டன. இருந்தும், சீனாவில் விஞ்ஞானம், கல்வி, கலைகள் எல்லாமே பெரும் நெருக்கடி நிலையில் உள்ளன என்று அவர்கள் வாதிடுகின்றனர். சமுதாயம் உண்மையில் மாறுதலடைய வேண்டுமானால் கலந்துரையாடும் பண்பையும், கருத்து வேற்றுமைகளையும் வரவேற்கும் ஒரு புதிய சூழ்நிலை உருவாக வேண்டும். இதை அவர்கள் ''அரசியலை ஜனநாயகமயப்படுத்தல்'' என்று அழைத்தார்கள். இந்த வேண்டுகோளிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் வருமாறு.

1. வெளிப்படையாக கருத்துரைத்தலும் சீர்திருத்தமும் நிலை நாட்டப்படுவதுடன் அரசியல் அமைப்புகளில் சீர்திருத்தங்கள் அதாவது ஜனநாயகமயமாக்கல் அதேநேரத்தில் உத்வேகத்துடன் நடைமுறைப்படு த்தப்பட வேண்டும். பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் நவீனமய மாக்கல் சம்பந்தமான முயற்சிகள் அனைத்துக்கும் ஒரே ஒரு உத்தர வாதம் ஜனநாயக மயப்படுத்தல் (சட்ட ஒழுங்கு ஆட்சி உட்பட) தான். இதை உலக வரலாறும் தற்போது சீனாவில் நிகழும் சம்பவங்களும் எமக்குப் பறைசாற்றுகின்றன. ஜனநாயக மயப்படுத்தலை அனுபவ த்தில் மக்கள் உணர வேண்டும். அப்பொழுது தான் அவர்களின் சொந்த முயற்சியும் செயற்பாடும் உண்மைப்பயனை அளிக்கும். சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் பொழுது கஷ்டங்கள் உண்டாவதைத் தவிர்க்க முடியாது. ஜனநாயக மயப்படுத்தல் மூலம்தான் மக்கள் தங்கள் கஷ்டங்களை மகிழ்ச்சியோடு சுமக்கக் கூடியதாக இருக்கும். எங்கள் முயற்சிகளையும், அறிவாற்றலையும் ஒன்றாக திரட்டிக் கொண்டால் எந்தத் தடையையும் வென்று விடலாம். மேலும் பண்டவிற்பனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம் நடைமுறையில் இருக்கும் ஒரு தேசத்தில் ஜனநாயக தத்துவத்தை உணர்த்துவதற்கு வேண்டிய பொறுப்பை மக்கள் வசம் ஒப்படைத்து விடவேண்டும். அவர்களின் மேற்பார்வை சிறந்த முறையில் நடைபெறும். கணக்கு வழக்குகள் நேர்மையாகக் காட்டப்படும். இவை இருந்தால் மட்டுமே ஒரு அப்பழுக்கற்ற அரசாங்கம் நிலைக்கலாம். மேற்பார்வை செய்யும் அதிகாரம் மக்களுக்கு இல்லாவிட்டால் ஊழல் களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது சாத்தியமாகாது. இந்த வரலாற்று அனுபவ நியதியிலிருந்து தப்ப முடியாது. ஆதி முதல் யாவரும் கண்ட றிந்த உண்மை இது.

2. அரசியல் ஜனநாயகமாக்கல் பற்றிய முதலாவது நியதி என்ன வென்றால் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பொது மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பூரண உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். முக்கியமாக பேச்சுச் சுதந்திரமும், பத்திரிகைச் சுதந்திரமும் வழங்கப்படுதல் வேண்டும். வெளிப்படையாக பேசுவதற்கு சுதந்திரம் உண்டானால், மாறுபட்ட கருத்துக்களைப் பகிரங்கமாகக் கூற முடியு மானால், தலைவர்களின் தாக்குதல்களுக்கும் பழிவாங்கலுக்கும் ஆளாகிவிடுவோமே என்ற அச்சமின்றி அவர்களை விமர்சிக்கும் சுதந்திரம் இருக்குமானால், எங்கள் நாட்டில் மக்கள் வாழ்க்கை உயிர்த் துடிப்புடன் விளங்கும். தடைகள் இராது. இசைவான ஒரு சூழ்நிலை நிலவும். மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளை பூரணமாக அனுபவி ப்பார்கள். உறுதிப்பாட்டுக்கும் ஐக்கியத்திற்கும் இதைவிட வேறு நம்பகமான உத்தரவாதம் எதுவும் கிடையாது. இதை ஆரம்பமாகக் கொண்டு சீர்திருத்தங்களைத் தங்கு தடையின்றி செயல்படுத்திச் செல்லலாம்.

3. தாம் நினைப்பதை வெளிப்படையாகப் பேசியவர்கள், அல்லது வெளிப்படையாக எழுதியவர்கள், அரசின் கருத்துக்களுக்கு நேர்மா றாகச் சிந்தித்தவர்கள் இப்படியானவர்களை அரசியல் குற்றவாளி களாக்கியது வரலாறு கண்ட ஒரு துயர நிகழ்ச்சி. மேற்கொண்டு இப் படியான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டுமானால் இலட்சியவாத நோக்கங்களுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இளைஞர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குக் கட்டளை பிறப்பியுங்கள். அரசியல் குற்றவாளி களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் பழக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்து எங்கள் நாடு ஒரு புதிய அரசியல் யுகத்துக்குள் நுழைவதை உறுதிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *வெண்டல் பிலிப்ஸ் (1811-1884)*

### சொற்பொழிவுகளிலிருந்து எடுத்த பகுதிகள்

*பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதை ஆதரித்ததோடு தொழில் செய்யும் முறையில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த போராட்டம் மேற்கொண்ட வெண்டல் பிலிப்ஸ் அமெரிக்க அடிமையொழிப்பு இயக்கத்தின் செயல் வீரன் என்று பிரபலம் பெற்றவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சனநாயக சீர்திருத்த சிந்தனை ஆர்வத்தின் திருவுருவம் என்றே இவரைச் சொல்லலாம். திரு வெண்டல் பிலிப்ஸ் அவர்கள் மனிதநேயத் துறைகளில் அயராது உழைத்தவர். அப்பழுக்கற்ற ஒழுக்கசீலர். தலைசிறந்த பேச்சாளர். பேச்சுச் சுதந்திரம் என்னும் பொருள் பற்றி இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து தெரிந்தெடுத்த இந்த மூன்று பகுதிகளும் இந்தப் பண்புகளைப் பறைசாற்றி நிற்கின்றன.*

சிந்தனைச் சுதந்திரம் எதிலெல்லாம் கிடையாதோ அதெல்லாம் சின்னாபின்னமாகட்டும். மாபெரும் மனிதவர்க்கத்துக்கு நிரந்தரமான நன்மையைக் கொடுப்பது சுதந்திரம், நீதி, உண்மை என்பவை தான். தன்பாட்டிலே சமுதாயம் இயங்கவிடப்பட்டால் இவற்றையே நாடிச் சென்று கொண்டிருக்கும். ஜோன்மில்டன் (மாபெரும் ஆங்கிலக் கவிஞர் மட்டு மல்ல பெரிய தீவிரவாதியும் கூட ( 1608 -74 ) ) சொல்லுகிறார். ''விடுதலைகள் பலவிதம்; இவற்றுள் விலைமதிப்பற்றதெனக் கொள்ளக் கூடியது சுதந்திரமாகச் சிந்திக்கவும் அறியவும் பேசவும் உள்ள உரிமை தான். இந்த உரிமை மறுக்கப்பட்டால் எவருக்கும் விடுதலை கிடையாது. இது மட்டும் இருந்து விட்டால் அடிமைத் தனத்துக்கு இடமில்லை''

* * *

யார் பேசுகிறார்கள் என்பது முக்கியமில்லை. ஆனால் அந்தப் பேசும் உதடுகள் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடக்கூடியதாக இருக்க வேண்டும். அவற்றுக்கு வாய்க்கட்டு போட்டுவிடக்கூடாது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஒருவர் எவ்வளவு தான் கீழ்மட்டத்தவராகவோ, வெறுக்க ப்பட்டவராகவோ இருந்தாலும் தனது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடும் உரிமையிருக்க வேண்டும் அவரின் கருத்துப் பொய்யான தாகவோ, வெறுக்கத்தக்கதாகவோ இருந்தாலும் அதை வெளிடும் சுதந்திரத்தைப் பாதுகாப்பது அந்த சமூகத்தின் கடமை. இதில் தவறும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை வெறும் அடிமைக் கும்பல் என்று சொல்வதை விட என்னதான் செய்யலாம்.

*　　　　*　　　　*

சிந்தனையாளர்கள் உங்கள் கருத்துக்களைச் சரி என்று ஏற்றுக் கொண்டால், மனிதாபிமானிகள் அவை நியாயமானவை என்று ஆமோதித்தால், நீங்கள் எதை நிலை நிறுத்தப் போராடினீர்களோ அதில் வெற்றி பெற்றவராவீர்கள். வன்செயலால் சாதித்தவற்றில் பாதி என்றுமே பறிபோய்விடுபவை. ஆனால் கருத்து மோதலின் பயனாய்ப் பெறப்படுபவை நிரந்தரமாக நிலைப்பவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜன கோஷ வழக்கு

''நீங்கள் விரும்பும் படி சிந்திக்கும் உரிமையையும், சிந்திக்கும் பிரகாரம் பேசும் உரிமையையும் ( விட்னி எதிர் கலிபோனியா (1927) 274 . யு. ஸ 357) பாதுகாக்க அரசியல் சட்டம் வற்புறுத்துகின்றது. இவற்றுக்கு மட்டுப்பாடுகள் உண்டு. அந்த மட்டுப்பாடுகள் சில அவற்றோடு பின்னிப் பிணை ந்தவை. வேறு சிலவற்றிற்கு வரையறைகளும் உண்டு. இந்த வரையறைகள் 15 ஆம் உறுப்புரையின் படி விதிக்கப்பட்டவை. எனினும் விரும்பத்தகாத, அருவருப்பான, வெறுப்பூட்டத்தக்க கருத்து வெளிப்பாடுகளும் பேச்சு சுதந்தரத்தின் எல்லைக்குள் அடங்குபவை தான் . ஆனால் இவை வன்முறையை அல்லது வேறு ஏதேனும் சட்ட விரோதமானசெயல்களைத் தூண்டி விடுபவையாகவோ அவற்றை ஆதரிப்பவையாகவோ இருத் தலாகாது. அமைதியானகருத்து வேறுபாடுகளை வெளியிடு வதற்கு இடமளிக்கவேண்டும். அப்படிச்செய்யாமல் தடுத்தால் அது என்றோ ஒரு நாள் பயங்கர வன் செயலாக படீரென்று வெடித்துக் கிளம்பலாம்''.

அமரதுங்க எதிர் சிரிமல் வழக்கில்
நீதியரசர் மார்க்பேர்ணான்டோ
( ஜன கோஷ வழக்கு )
**08.03.93**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

ஔங்சன் சூகீ புகைப்படங்கள் அச்சத்திலிருந்து விடுதலை என்னும் அவரின் கட்டுரைகளின் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது (லண்டன், இங்கிலாந்து, பென்குயின் புத்தகங்கள் (1990). பேட்ரன்ட் ரஸல் ஓவியம் றோஜர் வ்றை என்னும் ஓவியரது, 1923 (பதிவிலக்கம் 4832, வெளியீட்டுக் கழகம், தேசிய ஓவியக் கூடம், (லண்டன்). நியூறம்பேக், குர்த்கீயூபர் புகைப்படங்கள் உல்ஸ்ரயின் அனுமதியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டன. வில்லி கிறாப்பின் புகைப்படங்கள் அவரின் சகோதரி அனலீஸா நூக்கிரப்பினால் வழங்கப்பட்டது. பின்வரும் புகைப்படங்கள் கரல்ட் ஸ்டேபான் அவர்களது வெள்ளை றோசாக்கள் என்ற நூலிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டன (கம்பேக், ஜேர்மனி, றோவோல்ட், 1990) சோபி ஸ்கொல் (மேலட்டையும், உட்புறமும்) கங்ஸ் (இங்க ஐஸ்ஸஸ்கோல்) கிறிஸ்ரோப் பிரோப்ஸ், அலக்ஸ்சாண்டர் ஸ்மொறல் (1992 றெவோல்ட் ஷ்ரன்புக் வெலாக் Gmbh றெயின்பெக் க்கம்பேக்)
வெள்ளை றோசா துண்டுப்பிரசுரங்களின் பிரதி வெள்ளை றோசா துண்டுப்பிர சுரங்கள் இங்யா ஸ்கொல் வெள்ளை றோசா மியோனிக் 1942-43 வெஸ்லியன் பல்கலைக்கழக அச்சகம் 1983 புது இங்கிலாந்து பல்கலைக்கழகத்திடம் இங்கியா ஐஸ்ரஸ்கோல் அனுமதி பெற்றிருந்தது. பேட்ரன்ட் ரஸலிலிருந்து சிந்தனைச் சுதந்திரமும் உத்தியோக பூர்வ பிரச்சாரமும் துணுக்குகள் பேர்ட்றன் றசல் சிந்தனைச் சுதந்திரமும் உத்தியோக பூர்வ பிரச்சாரமும் அன்வின் கைமன் வெளியிட்டது. காப்பகொலின்ஸ் வெளியீட்டாளர்கள் பிரசுரம். ஔங்சன்சூகி கீயின் கட்டுரைகள் அச்சத்திலிருந்து விடுதலை என்னும் தொகுப்பிலிருந்து வெளியீட்டாளர்கள் பென்குயின் நூல்கள் நிறுவனத்திடம் இருந்து பெற்ற அனுமதியுடன். ரேமண்ட் வில்லியம்ஸ் கலை: சுதந்திரமும் ஒரு கடமை தான் என்பது வேசோ புதிய இடதுசாரி நூல்கள் நிறுவனத்தின் அனுமதியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. ( அரசியல் சீர்திருத்தங்கள், விஞ்ஞானம் ஜன நாயகம் வாங்லிசி எழுதிய பெருஞ்சுவர் மகாத்மியம் ( நியூயோக், லண்டன், W.W நோட்டன்கம்பனி என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டன). அதே நூலிலிருந்து 42விஞ்ஞானிகளின் பகிரங்கக்கடிதம் எனும் கட்டுரைகளில் இருந்து 42 விஞ்ஞானிகளின் வேண்டுகோள் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

பின்னட்டையில் இடம்பெறும் ஐ.உ.பா.இ சின்னம் றிச்சார்ட் கேப்பிறியலின் கைவண்ணம்

இன்டெக்ஸ் ஒன் சென்ஸஷிப் நல்கிய ஊக்குவிப்புக்கும் நடைமுறை ஆதரவுக்கும் ஐ.உ.பா.இ மீண்டுமொரு முறை தனது கடமைப்பாட்டைத் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுக்கருத்தின் மதிப்பு வரிசையில் முன்னைய இதழ்கள் உங்களிடம் உள்ளனவா?

19 ஆம் நூற்றாண்டு மருத்துவ நிபுணர் ஜோன் ஸ்நோ வாந்திபேதி பரவுவதைத் தடுக்க ஆற்றிய ஆராய்ச்சிப்பணி, பாவத்துக்கெதிராகக் குரலெழுப்பிய ஷேக்ஸ்பியரின் லியர் மன்னர் நாடகத்தில் வரும் ஏழைச்சேவகன், தானே தனக்குள் சிந்திப்பதின் முக்கியத்துவம் பற்றிய கௌதம புத்தரின் மதிநுட்பஞ்செறிந்த அறிவுரை - இவையனைத்தும் *மாற்றுக் கருத்தின் மதிப்பு 1* இல் அடங்கியுள்ளன. ஜனநாயகம் பற்றி ஈ.எம். ஃபொஸ்டர், (1937), பேச்சுச் சுதந்திரம் பற்றி நீதியரசர் லூயி பிரண்டைஸ் (1927), ஆதாம் மிச்னிக் சிறைச்சாலைக் கடிதங்கள் (1983) இவ்வெளியீட்டை அணிசெய்கின்றன. இதற்கென 1992 இல் ஸ்டீவன் ஸ்பெண்டர் முன்னிருந்த சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் ஜனநாயகத்தின் வருங்காலம் பற்றித் தமது ஆதங்கத்தை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார். ஐ.உ.பா.இ. முன்னுரை வழங்கியுள்ளது.

*மாற்றுக் கருத்தின் மதிப்பு 2* இல் கலிலியோ கலிலி 17ம் நூற்றாண்டில் அண்டத்தின் மத்தி சூரியன்தான், பூமியல்ல என்று வாதிட்டதினால் கத்தோலிக்க திருச்சபையினருடன் மோதிக் கொண்டதை வர்ணிக்கிறது. இந்த வாக்குவாதம் 1992 ஆம் ஆண்டுவரையும் உத்தியோக பூர்வமாக முடிவடையவில்லை அத்துடன் பிரதமர் ஜவஹர்லால் நேரு குடியியல் சுதந்திரத்தின் அர்த்தம் என்பது பற்றியும் 19ம் நூற்றாண்டு தத்துவ ஞானி ஜோண் ஸ்ருவேட் மில் தனித்துவம் பற்றியும் எழுதியவை இடம் பெறுகின்றன. அதுமட்டுமல்ல மாக்ஸிஸ்ட் இயக்கத்தின் தலை சிறந்த பெண்போராளி றோசா லக்சம்போக் சுதந்திரம் என்றால் என்ன என்பது பற்றியும், றோபேட் ஈ மச்சின் சமகால சிந்தனைகள் மார்க் ட்வெயின் அடிமைத்தனத்திற்கு எதிராக உருக்கமாக குறிப்பிடும் அழியாப் புகழ் கொண்ட ஃக்கல்பெரி பின்னின் துணிகரச் செயல்கள் என்னும் நூலில் வரும் கூற்றையும், இத்தொகுதியில் காணலாம்.

*மாற்றுக் கருத்தின் மதிப்பு 4* இல் அவசரகால நிலைமை நிலவும் நாடுகளில் சட்டதிட்டங்களைப் பேணி ஒழுக வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஸ்டீபன் நெஃப் இன் கட்டுரையும், ஐ.உ.பா. இயக்கத்தின் தாபகர்களில் ஒருவரான எஸ். நடேசன் கியு.ஸி. அரசியலமைப்பு சார்ந்த கற்பனை விவாதம் ஒன்றின் மூலம் முரண்பாடான கருத்துக்களைக் கூறுவதுடன் சகிப்புத்தன்மையைப் பேணவேண்டும் என்பதை நகைச்சுவையாகக் கூறியுள்ள கதையும் இடம்பெறுகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பிரபலமான மாற்றுக்கருத்தாளரான நோம் ஷொம்ஸ்கி ஐக்கிய அமெரிக்காவிலே போர் எதிர்ப்பு போராட்டங்களின் வெற்றி தோல்விகளிற் சிந்தனை செலுத்துகிறார். மற்றும் முன்னாள் இந்திய சட்டத்துறை நாயகமான ஸோலி ஜே. ஸோரப்ஜி, பல்வேறு இயல்புகளைக் கொண்ட ஜனநாயக சமூகத்தினது மூலநாதம் சகிப்புத்தன்மையே என்றும் ஒரு காலப்பகுதியின் மறுப்புக் கொள்கைகள் பெரும்பாலும் மறு காலப்பதியின் வேதவாக்காகி விடும் என்றும் ஞாபகப்படுத்துகின்றார். தொடர்ந்து மதிப்புமிக்கதொரு நச்சுத்தன்மை ஆராய்ச்சியாளரான மரிஆன் செமெல், இணங்காமலிருப்பது விஞ்ஞானத்துறை சம்பந்தப்பட்டவரை பெறுமதி வாய்ந்தது என்பதை உத்தியோகபூர்வ கோட்பாட்டினை ஏற்றுக்கொண்ட அல்லது மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்த விஞ்ஞானிகளை உதாரணங்காட்டி உறுதிப்படுத்துகிறார். 1980 இல் இலக்கியத்திற்கான நொபெல் பரிசினை ஏற்றுக்கொண்ட போலந்து நாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவராகிய ஷெஸ்லோ மிலோஸ் கவிதையானது அரசியலுக்குச் சார்பாக இருப்பதைவிட உண்மை நிலைக்கும் மொழிக்கும் கடமைப்பாடு உடையதாக இருக்கவேண்டுமென்று கூறுகின்றார். ப்ரான்டிசெக் க்ரீகல் என்ற கட்டுரையில் டேவிட் பூல்டன் மக்கள் மனதை விட்டு அகன்ற செக் நாட்டுத் தலைவரை உலகறியச் செய்கிறார். ஒரு கொம்யூனிஸ்ட் முதுவரான ப்ரன்டிசெக் க்ரீகல், சீர்திருத்தங்களை மீளப்பெறுவதற்கும் 1968 இல் செக்கஸ்லோ வாக்கியா மீது படையெடுப்பதற்கும் வழிவகுத்த உடன்படிக்கை முதற்குறிப்புகளிலே கைச்சாத்திட மறுத்தார்.

*எமது மாற்றுக் கருத்தின் மதிப்பு* 5 இல் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய நைஜீரியாவைச் சேர்ந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட சமூக ஆர்வலர் கென் சரோ-வீவா" வின் கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் மண்டேலாவின் வழக்கறிஞர் "பிராம் பிஸ்ஷர்" கைதிக்கூண்டிலிருந்து ஆற்றிய சொற்பொழிவும் சேர்க்கப்பட்டுள்ளது. இவருக்கு பின்னர் ஆயுள்கால தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மற்றும் சீனாவின் மனிதவுரிமை ஆர்வலர் "வேய் ஜிங்ஷாங்" இன நீதிமன்ற செயற்பாடுகளின் சாற்றுகள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. செக்கோஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த "வக்லவ் ஹவெல்" 1983 இல் சிறையிலிருந்து மீண்டபோது விடுத்த அறிக்கையும் தரப்பட்டுள்ளது. "மிலிந்தவின் கேள்விகள்" என்ற பாளி மொழியில் உரைக்கப்பட்ட புராதன அரசர்களால் போற்றப்படும் கேள்வி பதில் கட்டுரையும் இணைக்கப்பட்டடுள்ளன. சுனாமி எப்படி ஏற்படுகின்றது என கட்டுரை வரைந்து அதனால் அந்நேரம் ஏளனப்படுத்தப்பட்டு தற்காலத்தில் கருத்தாய்வுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானி "அல்பிரட் வேக்னரின்" கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் மாற்றுக்கருத்திற்கான உரிமை பற்றி "புரொநொவ்ஸ்கி மற்றும் "மஸ்லிஷ" வின் கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. "ஹான்ஸ் கிறிஸ்தியன் அன்டர்சனின்" "பேரரசனின் புத்தாடைகள்" என்ற கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளன. முடிவாக எமது ஸ்தாபர்களில் ஒருவரான "சார்ள்ஸ் அபேசேகர" வின் (1926-1998) கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளது."


வரலாற்றில், பிறர் உரிமைக்காக முதல் முறையாக குரல் கொடுத்த போது இயக்கம் எது? நீங்கள், தற்போது எம்மால் தயார்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் *மாற்றுக் கருத்தின் மதிப்பு* 6 வது இதழை வாசித்து இதைப்பற்றி அறிந்துகொள்ளலாம். நீங்கள் இதன் பிரதிகளையோ அல்லது மேலும் வரஇருக்கும் எதிர்கால பிரதிகளையோ பெற விரும்பின் எங்களுக்கு அறியத்தாருங்கள்.

இதனை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு மின்னஞ்சல், cirinades@gmail.com அல்லது 31, சாள்ஸ் பிளேஸ், கொழும்பு - 3 சிறி லங்கா க்கு எளுதவும்.

**இத்தொடரின் தொகுப்பு தொடர்ந்துகொண்டே போகும். ஆலோசனைகள், கருத்துக்கள், மூலவாக்கியங்கள், ஓவியங்கள், புகைப் படங்கள், வரைவுச்சித்திரங்கள், கேலிச்சித்திரங்கள் ஆகியனவும் வேறு பங்களிப்புகளும் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படும்.**

**மாற்றுக்கருத்து**
**31, சார்ள்ஸ் இடம்**
**கொழும்பு 3**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*printed by Karunaratne & Sons (Pvt) Ltd.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org